ஸ்ரீ நகர விமர்சம்



ஸ்ரீ ஞானப்பிரகாசன்
ந்யூ டெக் ஸுப்ரஜா
பிளாட் எண். 377, 6வது செக்டர், 30வது தெரு, கே.கே. நகர்,
சென்னை - 600 078. போன் : 24740001.
Mobile : 94451 10199
2023
₹ 45/-

ஸ்ரீ நகர விமர்சம்

ஆக்கியோன்
ப்ரஹ்மஸ்ரீ ந. ஸுப்ரமண்ய அய்யர்



ஸ்ரீ ஞானப்பிரகாசன்
ந்யூ டெக் ஸுப்ரஜா
பிளாட் எண். 377, 6வது செக்டர், 30வது தெரு, கே.கே. நகர்,
சென்னை - 600 078. போன் : 24740001.
Mobile : 94451 10199
2023
₹ 45/-

First Edition 1937 - 1000 Copies
Second Edition 1950 - 1000 Copies
Thierd Edition 2023 - 500 Copies

விஷய ஸூசிகை

பக்கம்

1. **Foreword** .... *iii*
2. முதற் பதிப்பின் முன்னுரை .... *xii*
இரண்டாம் பதிப்பின் முன்னுரை .... *xvi*
3. ஸ்ரீ நகர விளக்கச் சுருக்கம் 1
4. பண்டாசுர சரித்திரச் சுருக்கம் 2
5. ஸ்ரீ நகரத்தின் கோட்டைகள் 3
6 ஸ்ரீ நகரத்தின் ஒவ்வொரு கோட்டையின் விளக்கச் சுருக்கம்
   1. உலோஹக் கோட்டைகள் 5
   2. இரத்தினப் பிராகாரங்கள் 9
   3. மஹா பத்மாடவீ பிராகாரங்கள்— சிந்தாமணி க்ருஹம் 17
7. ஸ்ரீ சக்ர ஆவரண தேவதைகளின் விளக்கச் சுருக்கம் 19
குருமண்டலம் 25
வித்யா தேவதைகள் 26
8. ஸ்ரீ சக்ரத்தின் அத்யாத்ம பாவனை 27
9. பாவனோபநிஷத்தின் சுருக்கம் 28
10. சாக்தாத்வைதச் சுருக்கம் 34

FOREWORD

I feel it to be a rare privilege to write this foreword, though at the same time I feel my unworthiness quite as keenly. Any words of adoration of Devi even by the best of men are but a gracious gift by Her to him and he but offers Her the best thing that he has—the magic of speech—to the giver of that magical power. Who among us was the best of men in historic times? Sri Sankaracharya. He says in that supremely beautiful and beautifully supreme devotional poem—one half of which is said to have come trailing clouds of glory from its Kailasa home—"that he offered to Her as a devotional offering the matchless magic and melody of that poem which was but Her gift, just as we wave before the sun a lamp enkindled by a ray from him or offer a handful of sea-water in worship of the sea or a handful of the cool liquid trickling from the moonstone in worship of the moon." I write this foreword only in that mood.

Among the supreme poems of devotion to Devi is the poem Âryâ *Dvisathi* or *Sri Lalita Stava Ratnam* by the Sage Durvasa. We generally associate his name with a choleric temper and recollect how he cursed Sakuntala and fell foul of Ambarisha. In fact he is called Krodha Battâraka (The Wrathful Sire). But he is no more wrathful than Narada is an inciter of quarrels. His anger, like Narada's incitement, is but to purify the soul and bring into the presence of God. In the Srimad Bhâgawata there is a beautiful story that the sage Atri prayed to the source of the universal life to reveal Himself to him and that the Trimurthis appeared before him and that they (Brahma and Vishnu and Siva) blessed him with three sons viz., the Moon God and Dattatreya and Durvasa. It is thus appropriate that the sage should compose a poem in praise of Devi.

'The Lalita Sahasranama has made us familiar with a description of the Supreme trans-cosmic splendour of the abode and the throne of the goddess Lalita Devi or Tripura Sundari. The abode is called Sri Nagara and it is surrounded by twenty-five ramparts. In its middle there shines the Chintamani palace. The Devi sits in the Bindu Peeta in the Sri Chakra in that palace. There is in the microcosm of the human body a parallel abode of Devi with identical glory and with Her identical divine presence. The most simple and sweet yet splendid and sublime descriptions o the glory of the Devi are in the Syâmalâ Dandaka of Kalidasa and Mooka Panchasathi of Mooka Kavi. I may refer also to Sri Gaudapada's Subhagodaya Sthuthi, Kalidasa's Devi Panchastavi, and the poems collected under the name of *Lalita Stava nava mani mala*, among other beautiful poems relating to the worship of Devi.

I feel strongly and wish to declare unhesitatingly that in the purest and highest form of the Sakthi philosophy we have the confluence and reconciliation of all the streams of the Hindu thought and that it is fitted and destined to give us crescent power and a sense of realism in life without losing our hold on the divine. Of late Hinduism has been a chaotic mobocracy of all sorts of cults in a state of mutual antagonism and perpetual war. No Hindu seems to be able to stand up and state what the fundamentals of his faith are, leaving room, of course, for divergent lines of thought and action starting from that great watershed of common beliefs and standards and practices. I think that the study and practice of the highest aspects of Shaktism will give him that courage and confidence and comprehensiveness.

The great interest now felt in the Shakti doctrine is largely due to the publication of the Tantra Sâstras by Arthur Avalon (Sir John Woodroffe). God Siva says in the Mahâ Nirvâna Tantra that the Sakti cult was specially revealed for the Kaliyuga. This declaration is perfectly justified by the synthetic and unifying character of Shaktism and its power of touching with equal effect

body and soul Here and Beyond this world and the next.

I referred above to the inclusiveness, catholicity, comprehensiveness and synthetic greatness of Shaktism. In the Sri Chakra worship the entire pantheon is found. The Shâkta philosophy has room in it for the Personal and the Impersonal Aspects of Godhead. It effects a reconciliation of the four Sadhanas which are supposed to be diverse and even mutually exclusive viz. Karma Yoga, Râja Yoga (Viz. Dhyâna Yoga), Bhakti Yoga and Jnana Yoga. Nay, it alone has given an honoured and effective place to that most unique and remarkable development of Hinduism viz., Râja Yoga or Dhyana Yoga which other systems either ignore or jettison or damn with faint praise or with excessive praise followed by the announcement that it is out of use in the Kali age! Let me take as a further illustration the great battle between the Arambha Vâda and the Parinama Vâda and the Vivarta Vâda—the battle which deafens our ears and fills us with an unnameable dread again and again. Man is bound to look at the world with the concepts of beginning and growth and end because such is the stuff of his own life and of the life around him. There is no good in abusing or ignoring the texture of the mind. You can, however, tell him that the rhythm of life includes an infinite series of such ups and downs. There the Ārambha Vâda has its due place. Then he can rise to the Parinama Vâda which makes him realise that the entire series is but the endless change of Jadasakti or Maya vitalised by Brahman. The Shaktha philosophy not only lays down the above truths but takes us to the Chit Sakti stage such Chit Sakti being one with Brahman. When that realisation comes, the soul will realise that what seemed before an endless series of evolutionary changes was but an appearance in the infinite Sacchidananda, just as the icecap of Kailasa is one with the rush and roar of the multitudinous waters of the Ganges.

The basis of Saktism is the Veda. The Devi Sookta in the Rig Veda coupled with Sri Sookta and Bhoo Sookta

and Neela Sookta and Durga Sookta as well as the Kena Upanishad which refers to Uma Haimavathi Bahusobhamana and the specific Shakta Upanishads show the Vedic declarations about the Mother-Aspects of God. Devi is Jada Shakti and Chit Shakti; She is Iccha Shakti and Jnana Shakti and Kriya Shakti; She is Maya Shakti and Moksha Lakshmi.

The Devi worship which is thus indicated and affirmed in the Vedas is amplified in the Ithihasas (Ramayana and Mahabharata) and in the Puranas (particularly in the Devi Bhagavata) and especially in the Agamas and Tantras and Yamalas.

I have already referred to the great Shakta hymns and poems. Bhaskararaya's works and especially his commentary on the Lalita Sahasranâma is an endless mine of the truths of Shakta philosophy.

This is not the proper place or occasion to enter into a description and discussion of the truth of Shaktism. Its annunciation of thirty-six tattwas as the ultimate constituents of the universe in a descending or ascending order (according as we proceed in our analysis and synthesis) shows how it includes and transcends the Sâmkhya system. The Sâmkhya system is one of the greatest philosopic constructions of the world. But it left a huge gap between Prakriti and Purusha; it did not synthesise the Purusha concept; and it did not rise to the highest concept which could synthesise both the Prakriti and Purusha concepts. According to the Shakti philosophy, the course of manifestation is Siva, Shakti, Nada, Bindu, Shudda-maya or chit Shakti, and Prakriti or Jada Shakti and its evolutes. The universe is a manifestation of Shakti.
hat must give us the knowledge of Siva (शिवज्ञानप्रदायिनी). Nay, the highest knowledge that she bestows is the knowledge of the identity of the soul and the oversoul. She gives that realisation—nay, Her nature itself is that realisation.

(ब्रह्मात्मैक्यस्वरूपिणी) ।

According to Shaktism, Brahman is Nishkala (निष्कळ) as well as Sakala (सकळ) i.e., without Prakriti and with Prakriti. As Prakriti means the Gunas, Brahman without Prakriti is Nirguna while Brahman with Prakriti is Saguna. When Shakti is *potential* in Brahman we call it Nirguna. When Shakti is kinetic in Brahman we call it Saguna. Its becoming kinetic is due to Ikshana or Sankalpa of Brahman. From the point of view of purpose we say that creation is due to Leela (pure sport). From the point of view of the evolving souls we say that it is due to their *Karma* and God's Daya or Kripa (grace). From the point of view of the orderliness of creation we call it Niyati or Swabhava or Kala. From the point of view of Eternity we call it Maya. To reconcile and unify all these angles of vision which gives up prismatic and complementary tints—the Saradathilaka says:—

सच्चिदानन्दविभवात् सकलात् परमेश्वरात् ।
आसीच्छक्तिः ततो नादो नादात् बिन्दुसमुद्भवः ॥

Kama Kala is said to be the Karana sarira of Devi. About Maya, the Devi Purana says in Chapter XV,

विचित्र कार्यकरणा अचिन्तितफलप्रदा ।
स्वप्नेंद्रजालवल्लोके माया तेन प्रकीर्तिता ॥

The inclusive and comprehensive nature of Shaktism is thus vividly clear. It etherealises the Sankhya concept of Prakriti; it materialises the Advaita Vedanta concept of Brahman; it kinetises the Vishistadvaita Vedanta concept of Brahman; and it synthesises the Dwaita Vedanta concept of the Universe. Nay, by its Sadhana of Yoga rousing the Kundalini Shakti in the microcosm till she leads the soul into union with God in the Sahasrara after a triumphal march from plane to plane, it makes religion a practical discipline instead of being a creed or mere logic-chopping. Nay, we are told that when we do not hear the hissing of the Serpent power (Kundalini Shakti) when we close our ears, we are

candidates for death and the supreme pucpose of our life has failed by neglect and inertia.

Thus Shakti is Prakriti, Maya, Mahamaya, Mayatheetha, Chitshakti, Sri Vidya, nay, Brahman Itself. In the Yogini Tantra, Kali Devi says: सच्चिदानन्दरूपाहं ब्रह्मैवाहं स्फुरत्प्रभं ॥ She has sprung from the Chid-agni. She is Lalitha—the sportive one—whose play is the world play. She is Meenakshi, Kamakshi, and Visalakshi. When she was Sati prior to the Daksha Yaga She manifested Herself to Siva in the ten forms known as the Dasamahavidya, viz., Kali, Bagalamukhi, Chinnamasta, Bhuvaneswari, Matangi, Shodashi, Dhoomavati, Tirupurasundari, Tara and Bhairavi. After Sati gave up her life in the fire of Yaga, the Lord was distraught with grief and bore her corpse till Vishnu cut the corpse into pieces and these fell in fifty-one places which are called the fifty-one Shakthi Peetas.

The Shakti Sadana is open to all. सर्ववर्णाधिकारश्च नारीणां योग्य एव च ।

(Goutamiya Tantra)

The Tantras speak of three dispositions (bhava), viz. Pasubhava, Virabhava and Divyabhava. We must rise from Pasubhava to Virabhava, and from Virabhava to Divyabhava.

In the Shakti Sadhana the Guru is all important. It is said that the Guru is the root (मूल) of Diksha (initiation), and that Diksha is the root of Mantra, and that Mantra is the root of Devata, and that Devata is the root of Siddhi. It is said that as one lamp is lit at the flame of another, so the divine *Shakti* is communicated from the Guru to the Shishya.

I must now bring this foreword to a close lest it should overstep its legitimate limits and becomes a book. I wish only to plead as strongly as I can that the world must shed its prejudices when it takes up Shaktism for

study. It must realise that Science and Shakta Vedanta are in vital and essential agreement.

Sir John Woodroffe says in his Maha Maya :—"The modern dynamic view of the constitution of matter—a view that has tended to dematerialise matter; a view that sees in the atoms of matter a vast magazine of Power; a view that is faced with a residual element of the inexplicable in all its mechanistic explorations; a view that sees in radio-activity the drafting of a new and practically inexhaustible energy into the hitherto-supposed closed and constant realm of physical energies :—already shows that Physical Science has taken vast strides towards the Shakta position which (a) makes Power to be the essence of everything (b) makes power in reality immeasurable in everything and in the universe for the matter of that; and (c) makes the "Dynamic Point" the perfect Magazine of Power (hence making the atom also a vast magazine). As regards the further and higher view of Vedanta that this Power manifesting itself as matter is essentially consciousness—Power which is measureless Joy expressed in unrestricted play, Physical Science has, as such nothing to say at present; but if one were logically to work out what is now implicit in its position, and imagine the promise contained therein fulfilled, particularly in consonance with the results and promises of Biological and Physical Sciences, one might feel that Science has unconsciously, taken even a longer stride than one would imagine towards the final position of Shakta Vedantism."

Further, India especially needs the Shakta Vedanta today. Her rooted pessimism has to be uprooted. Shaktism is rooted in joy (Ananda) and blossoms as Chit (consciousness) and has the threefold fruitage of Shakti (Iccha Shakti, Jnana Shakti, Kriya Shakti, Swarupini). Such Shakti is not destructive power but constructive energy which is Wisdom and Love and Service (Chitkala Ananda Kalika Prema Rupa Priyamkari).

Mr. N. Subramania Iyer, the author of this book is the President Founder of the Sree Brahma Vidya Vimarsini Sabha, and is a profound student and follower of the vedanta philosophy and is well versed in Sri Vidya. Sri Vidya is Brahma Vidya and the two terms are equivalent and interchangeable. Mr. N. Subramania Iyer holds that the philosophic idealistic monism of the Upanishads is implemented by the practical course of Sadhanas taught by Sri Vidya. His teachings as the head of the Sri Brahma Vidya Vimarsini Sabha are a pure and thorough exposition of the Upanishadic truths as vitalised and supplemented by the higher and purer forms of Sri Vidya worship. His aim and mission is the removal of the misconception that Sri Vidya or Shakti worship in its purest and most excelled form is in any way different from the Upanishadic Sadhanas. In his learned and elaborate introduction to the present work, he has established this truth and has given an Adhyatmic interpretation of Sri Nagara and the deities presiding over the different locations there. His exposition is enforced by valuable and important citations, and is illustrated by diagrams which clearly impress on our minds various aspects which have till now remained obscure and abstruse in the Sri Nagara concept. He has shown how the worship of Devi is the practical and powerful means for the understanding and realisation of the Mahavakyas and is therefore identical with Brahma Vidya itself. The cult is sure to appeal to all because it fuses the realistic and idealistic attitudes into a vital unity and also because it fuses together qualities that now go their separate ways—self-respect and service, strength and surrender, power and love, strenuous effort and self-poised composure, the joy of life and the life of joy.

The description of the Paradise of Lalita Devi in Durvasa's poem is not only a revelation of the ultimate and eternal reality but is also a perfect work of art and a master-piece of descriptive and picturesque word-painting.

आदिमरसावलंबा मनिदं प्रथमोक्ति वल्लरी कलिकाम् ।
आब्रह्मकीटजननीं अन्तः कलयामि सुन्दरीमनिशम् ॥
प्रभुसंमितोक्ति गम्यं परमशिवोत्संगतुँगपर्यङ्कम् ।
तेजः किंचन दिव्यं पुरतो मे भवतु पुंड्रकोदण्डम् ॥

The poem excels even Kalidasa's poetry in its mastery of the Ârya metre which combines accent and quantity in a way unusual in Sanskrit prosody and which can, in the hands of a great master, become a magic flute of divine melody. Mr. N. Subramania Iyer has given to us a masterly exposition of the masterpiece and I wish it ever-widening public appreciation. He has the great good fortune of being wrapt up in a great realisation and of spreading it all round and deserves our gratitude and praise.

महान्तः सेवन्ते सकलजननीं बैन्दवगृहे ।
शिवाकारां नित्याममृतझरिका मैन्दव कलां ॥

(Sri Gaudapadacharya's Subhagodaya Sthuti..

Madras, 20th Aug. 1937.

K. S. RAMASWAMI SASTRI.

உ

ஸ்ரீ:

முதற்பதிப்பின் முன்னுரை

ஸர்வ ஜீவர்களும் விரும்புவது நித்ய சுகமும் வெறுப்பது துக்கமுமாமென்பது மிகப் பிரசித்தமாம். இந்நித்திய சுகமே ஸர்வ அநர்த்த நிவர்த்தி பரமாநந்தப் பிராப்திரூப மோக்ஷமாகும். இது ஜீவ ப்ரஹ்மைக்கிய வடிவ தத்துவ ஞானத்தினாலேயே ஏற்படுவதாகும். இந்த அபேத தரிசனம் வேதங்களாகிற உபநிஷத்துகளில் நன்கு பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது. உபநிஷத்துக்களுக்கு ஞானகாண்ட மென்று பெயர். வேதமானது கர்மம், பக்தி, ஞானம் என்னும் மூன்று காண்டங்களையுடையதாகும். இவற்றுள் கர்மம் சித்த சுத்திக்கும், பக்தி மனத்தின் விக்ஷேப நிவர்த்திக்கும், ஞானம் ஆவரண (மறைப்பு, அஞ்ஞானம்) நிவர்த்திக்கும் சாதனங்களாகும்.

இத்தகைய சிறந்த ஸாதனங்கள் நிறைந்த வைதிக தர்மமானது, கலியுகம் பிறந்து 3060 வருடங்கள் கடப்பதற்குள், நிலைகுலைந்து க்ஷீணிக்க ஆரம்பித்தது. வேதத்திற்குத் தாறுமாறான அர்த்தங்களைக் கற்பித்து அவைதிகமான கர்மோபாஸனைகள் செய்யப்பட்டு வந்தன. அத்தருவாயில், பகவான் பரமேச்வரன் சங்கர பகவத் பாதராய் அவதரித்து அவைதிகமான மதங்களைக் கண்டித்து வைதிகமான ஸநாதன தர்மத்தை நிலைநிறுத்துவதற்காக உபநிஷத்துகள், கீதை, பிரஹ்ம ஸூத்திரம் ஆகிய பிரஸ்தானத்திரயங்களுக்கும் பாஷ்யம் செய்தார். இங்ஙனம் தாம் இயற்றிய அத்வைத பாஷ்யத்தை புலகத்தில் பரவச் செய்ய திக் விஜயம் செய்தார். பல சிஷ்யர்களுக்கு அருள் புரிந்தார். பிரதானமாயுள்ள நான்கு சிஷ்யர்களை நான்கு மடங்களில் ஸ்தாபித்தார். இந்த நான்கு மடங்களே

நான்கு ஆம்நாய பீடங்களாகும். தக்ஷிணாம்நாய பீடமாகிய சிருங்ககிரியில் ஸ்ரீ சாரதா தேவியைப் பிரதிஷ்டை செய்து ஸ்ரீ ஸுரேச்வராசார்யாளை அங்கே யிருந்து அத்வைதோபதேசம் செய்து வரும்படி ஆக்ஞாபித்தார். இங்ஙனமே பத்மபாதர், ஹஸ்தாமலகர், தோடகர் ஆகிய மற்ற மூன்று பிரதான சிஷ்யர் களையும் பச்சிம, உத்தர, பூர்வாம்நாயங்களாகிற துவாரகை, பதரி, ஜகன்னாதம் என்னும் பீடங்களில் இருக்கச்செய்து தான் காஞ்சீ காமகோடி பீடத்தில் சில நாள் வசித்து அத்வைதப் பிரகரணங்கள், ஸௌந்தர்ய லஹரீ, ஸ்ரீ லலிதா த்ரிசதீ பாஷ் யம் முதலிய கிரந்தங்களை யியற்றி யருளினாரென்பது ஸ்ரீ சங்கர விஜயத்தில் மிகப் பிரஸித்தமாம்.

ஸ்ரீ பரமாசார்யாள் நிர்க்குண தத்துவப் பிரதிபாதகமான அத்வைதத்தைத் தமது சிஷ்யர்களுக்கு உபதேசிக்கையில் அவ்வத்வைத தத்துவம் அவர்களின் மனதில் நன்கு ஸ்புரிப் பதற்காக ஸ்ரீ வித்தையை உபதேசித்துத் தம்மால் ஸ்தாபிக்கப் பட்ட நான்கு ஆம்நாய மடங்களிலும் ஸ்ரீ சக்கிர ஆராதனை யைச் செய்வித்ததாகத் தக்க பிரமாணங்களால் ஏற்படுகின்றது இன்றும் ஷை மடங்களில் ஸ்ரீ சக்கிர ஆராதனை நடப்பதைக் கண் கூடாய்ப் பார்க்கலாம்.

ஸ்ரீ வித்தை யென்னும் சித் வித்யோ பாஸனையானது வேதப்ரதிபாத்யமும், பிரஹ்ம விஷ்ணுவாதி ஸகல தேவதை களாலும் அனுஷ்டிக்கப்பட்டதுமாகும்.

சிதி, சைதன்யம், சித்ரூபம், ஆத்மா, பூர்ணாஹந்தா, பிரஹ்மம், ஞானம், சித்சக்தி, சித்வித்யை, பிரஹ்மவித்யை, கைவல்யம், ஸம்வித் என்பன ஒரு பொருட்பரியாய நாமங் களாகும்.

மேலும், பிரஹ்மப் பிரதிபாதகங்களாகும் உபநிஷத்துக் களில், திரிபுரோபநிஷத்து, தேவீ உபநிஷத்து, பாவனோப நிஷத்து முதலியவைகளிலும், பரசுராம கல்ப ஸூத்திரங்களி லும், ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம், ஷை பாஷ்யம், த்ரிசதீ

ஸ்தோத்ரம், ஷடி பாஷ்யம், ஸூதஸம்ஹிதை, தத்தாத்ரேய ஸம்ஹிதை, ததீசி ஸம்ஹிதை, ஸநக, ஸநந்தன, ஸநத்குமார், வஸிஷ்ட, சுகஸம்ஹிதைகள், ஞானார்ணவம், குளார்ணவம், வாமகேச்வரதந்த்ரம், ருத்ரயாமளம், தேவீ பாகவதம், லலிதோபாக்யானம், தேவீ மஹாத்மியம், தந்திர ராஜம், கௌடபாத ஸூத்ரங்கள், சக்திஸூத்ரம், ஈச்வரப்ரத்ய பிஞ்ஞா ஸூத்ரம் முதலிய சிறந்த கிரந்தங்களிலும் ஸ்ரீ வித்தை யானது மிகச் சிரேஷ்டமான தென்றும், ஞானவித்தையென் அம், மோக்ஷத்திற்குச் சிறந்த சாதனமானதென்றும் மிக விரிவாய்க் கூறப் பட்டிருக்கின்றது.

இதை யறியாமல் பலர், ஸ்ரீ வித்யோபாஸனையானது ஜடசக்தியாகிற மாயோபாஸனை யென்றும், தாந்திரிகமான வித்தையே யன்றி வைதிகமானதன்றென்றும் அபிப்ராயப் படுகின்றனர். இது முற்றிலும் பிசகேயாகும். எல்லா ரிஷி களும், முனிகளும், ஸித்தர்களும் இச் சிற்சக்தியுபாஸனையிலு லேயே மோக்ஷத்தை யடைந்ததாகப் புராணங்களும் ஸ்மிருதி களும் கூறுகின்றன.

ஸ்ரீவித்தையைப் பரவச்செய்ய அவதரித்த பல ஆசாரியர் களில் ஒருவர் துர்வாஸ மஹரிஷியாகும். இவர் சித்சக்தியாகும் பரதேவதையின் நகரமாகிய ஸ்ரீ நகரத்தை நன்கு வர்ணித்தும், அந் நகரத்தைச் சுற்றிலும் சூழ்ந்துள்ள 25 கோட்டைகளை விளக்கியும், அக் கோட்டைகளுக் குள்ளேயுள்ள சிந்தாமணி கிரகத்தைப் புகழ்ந்தும், அதற்குள் தேஜோமயமாய் விளங் கும் ஸ்ரீ மஹா சக்கிரத்தை விவரித்தும், அச் சக்கிரத்தின் நடுவே பிந்து பீடத்தில் விளங்கும் பரப்பிரஹ்மமாகிய காமேச் வரரையும், பிரஹ்ம சக்தியாகிற காமேச்வரியையும் ஸ்தோத் தரித்தும், வடமொழியில் சொற்சுவை, பொருட்சுவைகள் ததும்ப 213 திருவிருத்தங்களில் "ஸ்ரீ லலிதா ஸ்தவரத்தினம்" அல்லது "ஆர்யா த்விசதி" என்னும் பெயருள்ள ஓர் அழகிய நூலினை இயற்றியுள்ளார். இது வடமொழி பயிலாதவர்க்குப்

பயனில்லாமலிருப்பதை யுணர்ந்து பல நண்பர்கள் அடியேனைத் தமிழில் மொழி பெயர்க்குமாறு உற்சாகப் படுத்தினார்கள். அவர்களின் பிரியத்தின் பொருட்டாகவும், அடியேனது மனனத்தின் பொருட்டாகவும் மேற்படி சிறந்த நூலைத் தமிழில் மொழி பெயர்க்கத் துணிந்து மொழி பெயர்த்துள்ளேன்.

விஷய காம்பீர்யத்தினாலும் எனது ஆராய்ச்சிக் குறைவினாலும் பல விஷயங்கள் விளக்கப்படாமல் விடுபட்டு இருக்கலாம். அவற்றை யுண்ணுணர்வுடைய ஆத்ம ஞானிகள் பொறுத்துக்கொண்டு அடியேன் மீது கருணை கூர்ந்து தெரிவிப்பார்களே யாயின், அவற்றை யான் வந்தன பூர்வமாய் ஏற்றுக் கொள்ளச் சித்தமாயிருக்கின்றனன்.

பவழந்தாங்கல்,
பரங்கிமலை P. O.
சென்னை, 16
16—8—1937.

இங்ஙனம்,
ஸஜ்ஜன விதேயன்,
ந. ஸுப்பிரமணிய அய்யர்.

உ

எனது குரு ஸ்ரீமதி ராஜம் சூரி, ஸ்ரீமதி ப்ரகாசம்பாள் அவர்களின் நூற்றாண்டு நடக்கும் இந்த சமயத்தில் அவர்களது குரு ப்ரம்ம ஸ்ரீ சார் ஸுப்ரமணிய ஐயர், ஸ்ரீ சீதா நந்தநாதர் அவர்களால் விளக்கப்பட்டுள் ஸ்ரீ நகரவிமர்சம் என்ற இந்நூலை அச்சு செய்து வெளியிடுவதில் மட்டற்ற சந்தோஷம் அடைகிறேன்.

சோபகிருது
ஆவணி-அவிட்டம் 2023
சென்னை - 78.

ஸ்ரீ ஞானப்பிரகாசன்

ஸ்ரீ:

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

ஸ்ரீ நகர விமர்சமென்னும் இந்நூலின் முதற்பதிப்பின் பிரதிகள் யாவும் செலவழிந்துபோய், சுமார் ஐந்தாறு வருடங்களாயினும், தேவீ பக்தர்களின் மனங்களிக்க மறு பதிப்பை உடனே அச்சிட்டு வெளிப்படுத்த முடியவில்லை. ஸ்ரீ பரதேவதையின் இன்னருளால் புதுப்பதிப்பு தற்போது வெளியாகின்றது.

இப்பதிப்பில் மூல சுலோகங்கள் நாகரலிபியில் அச்சிடப்பட்டுள்ளன. அன்றியும், இந்த ஸ்தவரத்தினத்தைப் பாராயணம் செய்வதற்கு அத்தியாவசியமான ரிஷி, சந்தஸ், தேவதை, பீஜசக்தி, கீலகங்கள் முதலிய அங்கங்கள் இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. முற்பதிப்பிலுள்ள பல எழுத்துப் பிழைகளையும் விஷய விமர்சக் குறைவுகளையும் நீக்கி இப்பதிப்பு வெளியாகின்றது.

இதனை, சென்னை ஜூபிடர் ப்ரெஸ் சொந்தக்காரர் ஸ்ரீ K. வெங்கடேசய்யர் அவர்கள் தமதுசொந்த பிரசுரம்போல் கருதி, எல்லா அழகுகளும் பொருந்த அச்சிட்டுத் தந்தனர். அவர்க்குச் சரீர ஆரோக்கியமும் திடகாத்திரமும் தர்ம சிந்தையும், சிரேயஸ்ஸும் மேலும் மேலும் அபிவிர்த்தியாகும்படி ஸர்வக்ஞையும், ஸர்வ சக்தையுமான பரதேவதை அருள் புரிவாளாக. அடியேனது பிரமாதாதி தோஷங்களால் இப்பதிப்பிலும் பல பிழைகள் இருக்கலாம்; பிழைகளைப் பொறுப்பது பெரியோர் கடனேயாகும்.

பவழந்தாங்கல்,
பரங்கிமலை, P. O.
மதராஸ் 16
15—6—1950.

இங்ஙனம்
விதேயன்
ந. சுப்பிரமணிய அய்யர்
(தொகுத்தவர்)

श्री गुरुभ्यो नमः

श्री ललिता महा त्रिपुरसुन्दर्यै नमः

ஸ்ரீ நகர விளக்கச் சுருக்கம்

वन्दे गजेन्द्रवदनं वामांका रूढ वल्लभाश्लिष्टम् ।
कुंकुमपरागशोणं कुवलयनीजार कोरकापीडम् ॥

எல்லா உலகங்களுக்கும் ஆதாரமாய், சுவர்ணமய மாய்ப் பன்னிற மணிகளாலாக்கப்பட்ட சரிவுகளை யுடைத் தாய், தேவர்களுக்கு இருப்பிடமாய், ஆயிரம் நெடு முடிக ளோடு பிரகாசிக்கும் மஹா மேருவிற்கு மூன்று உன்னத மான சிகரங்களுண்டு. அவை கிழக்கு, நிருதி, வாயு என் னும் மூன்று திக்குகளில் விளங்கும். கிழக்கே யுள்ளது பிரஹ்ம பட்டணம்; நிருதியிலுள்ளது விஷ்ணு பட்டணம்; வாயுவில் விளங்குவது ருத்திர பட்டணம். இந்த மூன்று பட்டணங்களுக்கு மத்தியில், இரத்தினக் கற்களின் ஒளி யால் எட்டுத் திக்குகளிலும் வியாபித்து விளங்குவதாயும், நானூறு காதம் உயரமுள்ள வோர் ஒப்பற்ற சிகரத்தின் உச்சியில், தேவ சில்பியாகிய விச்வ கர்மாவினால் நிர்மிக்கப் பட்டதாயும், ஒன்றைவிட மற்றொன்று கிரமமாய் உயர்ந்து இடையிடையே ஏழேழு காதம் அகலமுள்ள இருபத் தைந்து கோட்டைகளையுடையதாயும், அவ்விருபத்தைந்து கோட்டைகளுக்கும் உள்ளே ஒன்பது சக்கிரங்களையுடைய தாயும் நாற்கோண வடிவினதாயுமுள்ள ஒரு சிறந்த பட் டணமானது ஞானயோகிகளின் ஆனந்த ஸ்வரூபமாய் விளங்கும்.

இங்ஙனம் இருபத்தைந்து கோட்டைகளோடு பிர காசிக்கும் ஸ்ரீ நகரமானது ஸ்ரீ லலிதா பரமேச் ்க்கு இருப்பிடமாகும். "லலிதா மஹா திரிபுர ஸுந்தரி பண். சுரன் என்னும் ஒரு அசுரனை ஸம்ஹாரம் செய்து விண் ணோர் மண்ணோர் முதலிய யாவருக்கும் க்ஷேமத்தை யருளினள்" என்பது ஸ்ரீ லலிதோபாக்யானம், தேவீ பாகவதம், மார்க்கண்டேய புராணம் முதலிய நூல்களில் விஸ்தாரமாய்க் காணலாம்.

பண்டாசுர சரித்திரச் சுருக்கம்

பரமேச்வரனது நெற்றிக் கண்ணினால் தகிக்கப்பட்ட மன்மதனை நினைத்துக் கூக்குரலிட்டு அழும் ரதி தேவி யைக்கண்ட பிரஹ்ம விஷ்ணுக்கள் மன மிரங்கிச் சாம்ப லான மன்மதனைப் பிழைப்பிக்கவேண்டி, அச் சாம்பலைக் குவித்து மனித உருவாகச் செய்து அதை அபிமந்திரித் துக்கொண்டிருந்தார்கள். உடனே அச் சாம்பலிலிருந்து பண்டாசுரன் என்னும் பெயரையுடைய ஓரசுரன் பிறந்து அஸஹாய சூரனாய் மண்ணோர் விண்ணோர் முதலிய எல் லோருடைய வீரியத்தையும் பக்ஷிக்க, யாவரும் வீரியமற்ற வராய் மிகவும் துக்கித்துக் கொண்டிருந்தார்கள். அப் போது தேவர்கள் கைலாயத்திற்குச் சென்று பண்டாசுர னது அட்டூழியங்களை மஹாதேவனுக்கு விண்ணப்பித்து அவனைச் சங்கரிக்கும்படி வேண்டிக்கொண்டனர்.

தேவர்களது வேண்டுகோளுக்கிரங்கிச் சிவபெரு மான், அப்பண்டாசுரனைக் கொல்லத் தக்க உபாயத்தை மனதில் நினைத்துச் சமுத்திரங்களை யாக குண்டமாகவும் பால், தயிர், முதலிய ஏழு சமுத்திரங்களிலுள்ளவற்றை

ஆஜ்யமாகவும், நிர்வீர்யர்களாய் வலிவற்று உயிர்ப் பிணங்களாயுள்ள தேவர், மநுஷ்யர், யக்ஷர் முதலிய எல்லோரையும் ஸமித்துக்களாகவும் ஏற்பாடு செய்து ஸர்வ ஸம்ஹார யாகமியற்றிப் பூர்ணாகுதி செய்து யாகபூர்த்தியில் தான் மாத்திரனாய் மிஞ்சிப் பேரானந்தத்தோடு தாண்டவம் செய்து கொண்டிருந்தனர். அப்போது அந்த சிதக்னி குண்டத்திலிருந்து "சித் சக்தி" ஆவிர்ப்பவித்து, மஹா சம்புநாதரை நோக்கி அச்சிவமும் தானும் ஐக்கியப் பட்டுச் சகல பிரபஞ்சத்தையும் தேவ, மநுஷ்யாதி எல்லோரையும் சிருஷ்டி செய்து வீற்றிருந்தனள். பர தேவதையால் மறுபடியும் சிருஷ்டிக்கப்பட்ட தேவதைகள் அம்பாளை வணங்கிப் பலவகையாகத் துதித்து தேவ சில்பியாகிய விச்வகர்மாவினால் ஒரு நகரம் சிருஷ்டி செய்வித்து, அதில் சிற்சக்தியாகிய லலிதைக்கும் காமேச்வரனுக்கும் மணம் புரிவித்து, அத்திவ்விய தம்பதிகளுக்கு ஸாம்பிராஜ்ய பட்டாபிஷேகம் செய்தனர். இங்ஙனம் காமகாமேஶ்வரிகள் கொலுவீற்றிருந்து அரசு புரியும் ராஜதானியே ஸ்ரீ நகரமாகும்.

இந்நகரத்திற்கு இருபத்தைந்து கோட்டைகளுள்ளன :—

அவற்றுள், உலோஹக் கோட்டைகள்

1. இரும்புக் கோட்டை
2. எஃகுக் ,,
3. செப்புக் ,,
4. வெள்ளீயக் ,,
5. பித்தளைக் ,,
6. பஞ்சலோகக் ,,
7. வெள்ளிக் ,,
8. தங்கக் ,,

இரத்தினப் பிராகாரங்கள்

9. புஷ்பராகக் கோட்டை
10. பத்மராகக் ,,
11. கோமேதகக் ,,
12. வஜ்ஜிரக் ,,
13. வைடூரியக் ,,
14. இந்திர நீலக் ,,
15. முத்துக் ,,
16. பச்சைக் ,,
17. பவழக் ,,
18. நவரத்தினக் ,,
19. நாநா ரத்தினக் ,,

மஹாபத்மாடவீ பிராகாரங்கள்

20. மனோமயக் கோட்டை
21. புத்திமயக் ,,
22. அஹங்காரமயக் ,,
23. சூரியப் பிராகாரம்
24. சந்திரப்பிராகாரம்
25. சிருங்காரக் கோட்டை

என்பனவாம்.

ஸ்ரீ நகரத்தின் ஒவ்வொரு கோட்டையின் விளக்கச் சுருக்கம் :—

1. இரும்புக் கோட்டை :—

இது ஸ்ரீ நகரத்தின் எல்லாக் கோட்டைகளுக்கும் முதலாவதாக வுள்ளது. இக் கோட்டையானது நாற் கோண வடிவினதாய் ஆயிரத்து அறுநூறு காதம் அகல மும் அவ்வளவு நீளமும் உள்ளது. இது ஆகாயத்தை யளாவும் துவஜங்களையும் கோபுரங்களையும் உடைத்தாய் மிக்க மனோகரமாய் விளங்கும்.

2. எஃகுக் கோட்டை :—

இரண்டாவதான இக் கோட்டையின் மேல் கட்டப் பட்டுள்ள பல மணிகளின் சப்தமானது ஆகாயத்தை யளாவி முழங்கிக் கொண்டிருக்கும். இதற்கும் முதலா வது கோட்டைக்கும் இடையிலுள்ள பிரதேசத்தில் பூத் துக் காய்த்துப் பழுத்துள்ள நானா விருக்ஷ மஹோத்தியா னத்தில் பல விருக்ஷங்களும் அவற்றின்மேல் படர்ந் தொளிரும் பல கொடிகளும் அக் கொடிகளின் பூங் கொத்துக்களினின்றும் பெருகியோடும் செந்தேனருவி களும் அத்தேனை யுண்டு மெய்ம்மறந்து ரீங்காரஞ் செய் யும் வண்டினக் கூட்டங்களும், மயில்கள், குயில்கள், கிளி கள், முதலிய பல பக்ஷி ஜாலங்களும், செந்தாமரை, வெண்டாமரை, செங்கழுநீர், ஆம்பல், முதலிய பல அழ கிய புஷ்பங்கள் நிறைந்த நீரோடைகளும், உத்தியான வனங்களும், மேடை மாளிகைகளும், கூட கோபுரங்களும் சிறந்து விளங்கும்.

அங்கே நீல நிறமான திருமேனியை யுடைய மஹா காளரானவர், காளி யென்னும் தனது பத்தினியோடு

ஸ்ரீநகரத்தின்,

1. உலோஹக் கோட்டைகள்.



ஹரிசந்தனம் என்னும் கற்பக விருக்ஷங்க ளடர்ந்த் தோட்டங்களும், செந்தாமரை, வெண்டாமரை, செங்கு வளை, கருங்குவளை முதலிய புஷ்பங்கள் நிறைந்து விளங் கும் கமலாலயங்களும் நடைவாவிகளும் உண்டு. அங்கே வர்ஷ ருதுவுக்கு அதிபனானவன் உருத்தரித்து நபஸ்ரீ, நபஸ்ய ஸ்ரீ என்னும் இரண்டு சக்திகளோடும் மிகவும் ஆனந்தமாய்க் கிரீடித்துக்கொண் டிருப்பான்.

6. பஞ்சலோஹக் கோட்டை :—

இது இரத்தினங்களா லிழைக்கப்பட்ட பல்நெடுஞ் சிகரங்களையும், பொற்றுவசங்களையும், பதுமைகளையும் உடைத்தாய் விளங்கும். இதற்கும் ஐந்தாவது கோட் டைக்கும் இடையில் உள்ள பிரதேசமானது, என்றும் மலர்ந்து நறுமணம் வீசும் மலர்கள் நிறைந்த மந்தார மென்னும் கல்ப விருக்ஷ வனங்களும், சுகந்தத்தை வீசும் இனிய தென்றலும், இன்னோரன்ன பல சிறப்புக்களையு முடைத்தாய் விளங்கும். அங்கே சரத்ருதுவுக்கு நாதனான வன், இஷஸ்ரீ ஊர்ஜஸ்ரீ என்னும் இரண்டு பிராண நாயகிகளோடு ஸ்ரீ லலிதா தேவியின் ஸேவையில் தற்பர னாய் விளங்குவான்.

7. வெள்ளிக் கோட்டை :—

இது தனது பிரகாசத்தால் எங்கும் வெண்மையைப் பரப்பிக் கணக்கற்ற நெடுமுடிகளையும் துவஜங்களையும் உடைத்தாய் விளங்கும். இதற்கும் ஆறாவது பிராகாரத் திற்கும் மத்தியில் உள்ள ஸ்தலமானது விண்ணையொட் டித் தாவும்படி உயர்ந்து விளங்கும் பாரிஜாத கல்ப விரு க்ஷங்களையும், இன்னிசையோடு கூவும் குயிலினங்களையும், மனோகரமான மாடமாளிகைகளையும் உடைத்தாய்ப் பிர காசிக்கும். அங்கே அதாவது பாரிஜாத வாடிகையில்

ஹேமந்தருதுவுக்கு நாதனான புருஷ ஸஹஸ்ரீ, ஸஹஸ்ய ஸ்ரீ என்னும் இரண்டு தேவிகளோடுங் கிரீடித்துக்கொண்டு பரமேஸ்வரியை அர்ச்சித்துக்கொண்டு விளங்குவான்.

8. தங்கக் கோட்டை :—

இந்தக் கோட்டைக்குப் பல இரத்தினக் கோபுரங்களும் மணிப் பதுமைகளும் பொற்கொடிகளும் உண்டு. இதற்கும் ஏழாவது கோட்டைக்கும் இடையில் கதம்ப விருக்ஷத் தோப்புகளும், மகரந்தத் திட்டுகளும், செந்தேன் அருவிகளும், மனோகரமான மணத்தோடுலவும் மந்தமாருதங்களும் மாடமாளிகைகளும் இன்னும் இத்தகைய பலவும் சிறந்து விளங்கும்.

இக் கதம்பவன வாடிகையில் சிசிரருதுவுக்கு நாதனானவன் தப ஸ்ரீ, தபஸ்ய ஸ்ரீ என்னும் இரண்டு சக்திகளோடு மஹா திரிபுரஸுந்தரியைப் பூஜிக்கும் பெருஞ் செல்வத்தோடு விளங்கி உலகமுழுவதையும் குளிரச் செய்துகொண்டு வசிப்பான்.

அன்றியும் இக்கதம்ப வனத்தில், திரிகோணம், பஞ்சகோணம், அஷ்டதள பத்மம், ஷோடச (16) தள கமலம், உள், வெளி யென்னும் இரண்டு தசகோணங்கள், சதுரம் ஆகிய ஏழு ஆவரண சக்கிரங்களோடு கூடி பிந்துஸ்தானத்தில் மந்திரிணி யென்னும் சியாமளா தேவி மஹா வைபவத்துடன் விளங்குவாள். மேலும் இம் மந்திரிணீ தேவியின் ஸ்வரூபமானது எங்ஙனமெனின் கூறப்படுகின்றது.

மயில் தோகையைப்போன்ற பன்னிறக் காந்தியையுடைத்துப் பனையோலையாற் செய்யப்பட்ட தாடங்கங்களையும், கற்பூர மணம் வீசும் தாம்பூலம் நிறைந்த செவ்விய

வ்ரயையும், சிவந்த வுதட்டில் நிர்த்தனம் செய்யும் மந்த ஹாஸத்தையும், குங்குமக் கலவையை யணிந்த திருமேனியையும், உலகனைத்தையும் மலரச் செய்யும் பாலசந்திரனை யணிந்த சிகரத்தையும், கஸ்தூரி திலகத்தையும், கதம்ப மலர் மாலைகளையும், இடது புஜத்தின்மேற் சரிந்த அளக பாரத்தையும் உடைத்தாய் ஒரு கரத்தில் கிளியையும், ஒரு கரத்தில் தாமரை மலரையும் தரித்து, மற்றிரண்டு கரங்களால் இனிய வீணையைத் தாங்கி வாசித்துக் கொண்டு அவ் வீணா கானத்தின் ஆநந்தத்தில் மூழ்கிய மனோபாவத்தை யுடையவளாய் ஸங்கீத மாத்ருகை யென்னும் சியாமளா விளங்குவாள்.

9. புஷ்பராகக் கோட்டை :—

இதற்கும், கோபுரங்களும், துவஜங்களும், மணிப் பதுமைகளும் உண்டு. இதற்கும் எட்டாவது கோட்டைக்கும் இடையில் புஷ்பராக மணிமயமான பூமியின்கண் பல சித்தர் கணங்கள் இராஜ ராஜேஸ்வரியைத் தியானித்துக்கொண்டு வசிப்பார்கள்.

10. பத்மராக மணிக் கோட்டை :—

இக்கோட்டையும் தனது ஒளியால் பத்துத் திக்குகளையும் பிரகாசித்துக்கொண்டு மணிமயங்களான துவஜங்களையும், கோபுரங்களையும், அரண்மனைகளையும், தோரணங்களையும் உடைத்தாயிருக்கும். இதற்கும் ஒன்பதாவது கோட்டைக்கும் இடையிலுள்ள பதுமராக மணிமயமான பிரதேசமானது, பராசக்தியைப் பூஜிக்கும் சாரணர்களோடு கூடி விளங்கும்.

11. கோமேதக இரத்தினக் கோட்டை :—

இதுவும் பேரொளியோடும், கூட கோபுரங்களோடும் மாட மாளிகைகளோடும் விளங்குவதாகும். இதற்கும்

பத்தாவது கோட்டைக்கும் இடையில் யோகினிக் கூட்டங் களோடு கூடி வடுகே தேவக் கூட்டம் வசித்துக்கொண்டு திரிபுராம்பிகையை ஆராதித்துக் கொண்டு விளங்கும்.

12. வச்சிர ரத்தினக் கோட்டை :—

பல சிறப்புகளையுடைய இக் கோட்டைக்கும் பதினோ ராவது கோட்டைக்கும் நடுவில் பல உத்தியானங்கள், தடாகங்கள், வாவிகள், மணி மாளிகைகள் முதலியன பல உள. இப்பிரதேசத்தில் அரம்பை, மேனகை, ஊர்வசி, திலோத்தமை முதலிய தேவதாசிகள் பராசக்தியாகிய காமேச்வரியை அர்ச்சித்துக்கொண்டு பரமானந்த பரிதர் களாய் வசிப்பர்.

13. வைடூர்யக் கோட்டை:—

இதற்கும் பன்னிரண்டாவது கோட்டைக்கும் மத்தி யில், சிருங்கார வனங்கள், மண்டபங்கள், மாளிகைகள் முதலியன சிறந்து விளங்கும். அங்கே பரதேவதையை உபாசிக்கும் அநந்தன், வாசுகி, தக்ஷகன், கர்க்கோடகன், சங்கன், குளிகன், பத்மன், மகாபத்மன் என்னும் அஷ்ட நாக (ஸர்ப்ப)ங்களும், பலிச்சக்கரவர்த்தி முதலிய அசுரர் களும் வாசஞ் செய்வர்.

14. இந்திர நீலக் கோட்டை :—

தனது காந்தியினால் ஆகாயத்தை நீல நிறமாகச் செய்யும் இந்திர நீல மணிகளிழைத்த பல வுயர்ந்த கோபு ரங்களையும் மற்றுமுள்ள பல சீர் சிறப்புக்களையுமுடைய திக் கோட்டையாகும் இதற்கும் பதின்மூன்றாவதாகிய வைடூர்யக் கோட்டைக்கும் மத்தியில், நீல மணிப்படிக ளமர்ந்த தடாகங்களும், நடை வாவிகளும், மாடங்களும், மண்டபங்களும் பல இருக்கின்றன. இங்கே மநு, மாந் தாதா, பகீரதன், கயன், சசிபிந்து, ப்ருது, பரதன் முதலிய

சக்கரவர்த்திகள் பரதேவதையை நமஸ்கரித்துக் கொண்டு வசிப்பார்கள்.

15. முத்துக் கோட்டை :—

மற்றக் கோட்டைகளுக்குள்ளதுபோலவே இதற்கும் கோபுரங்களும், பொற்பதுமைகளும், தோரணங்களும், துவஜங்களும், மாடங்களும் உள்ளன.

இதற்கும் பதினுன்காவது கோட்டைக்கும் இடையேயுள்ள இடமானது பல தோட்டந் துறவுகளாலும், மாடமாளிகைகளாலும் சூழப்பெற்றுள்ளதாகும். இங்கே கிழக்குத் திக்கில் தேவேந்திரன் ஐராவதத்தை யாரோகணித்து வஜ்ஜிராயுதத்தைப் பூண்டு, சசீதேவியுடன் கூடி ராஜராஜேஸ்வரியை யாராதித்துக் கொண்டிருப்பன்.

தென் கிழக்காகும் அக்னி மூலையில் ஹவ்ய கவ்ய வாகனனாய், அக்கினி தேவன் செம்மறியாட்டின்மேல் ஏறிக்கொண்டு, ஸ்ருக், ஸ்ருவம், விசிறி, அந்ந பாத்திரம், சக்தியாயுதம், துறட்டுக்கோல் முதலிய ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு ஸ்வாஹா, ஸ்வதா என்னும் மனைவிகளோடுகூடி திரிபுரஸுந்தரியைத் தியானம் செய்து கொண்டிருப்பன்.

தென் திசையில் இயமன் மகிஷ வாஹனத்தின் மேலேறிக்கொண்டு தண்டாயுதத்தைப் பூண்டு சியாமளா தேவியோடு திரிபுராம்பாளைத் தியானித்துக்கொண்டு வசிப்பன்.

தென்மேற்கு மூலையில் நிருருதி நரவாகனத்தின் மேலேறி, ஈட்டி, இரும்புத்தடி, கட்கம், கேடகம் முதலிய ஆயுதங்களைத் தரித்து, தீர்க்காதேவி ஸமேதனாய் திரிபுர சுந்தரியை அர்ச்சித்துக்கொண்டு வாழ்வான்.

மேற்குத் திக்கில் வருணன், முதலையின்மேல் வீற்றிருந்து சிக்கக் கயிற்றைக் கையில் தாங்கி காளியென்னும் சக்தியோடு மஹா திரிபுர சுந்தரியைத் தியானித்துக் கொண்டிருப்பன்.

வடமேற்கு அதாவது வாயு மூலையில் வாயு பகவான் மான் வாஹனத்தை யாரோகணித்து துவஜமென்னும் ஆயுதத்தைப் பூண்டு, அஞ்சனுதேவி ஸமேதனுய் கோரக்கன் முதலிய பல சித்தர்கள் புடைசூழப் பராசக்தியைப் பஜித்துக்கொண்டு விளங்குவன்.

வடக்குத் திக்கில் குபேரன் குதிரை வாஹனத்தின் மேலேறிக் கத்தியைக் கையில் தாங்கிச் சித்திர ரேகையென்னும் மனைவியோடு சேர்ந்து மாணிபத்திரன் முதலிய யக்ஷர்கள் புடைசூழ மஹா திரிபுரசுந்தரீ தியான தற்பரனுய் வீற்றிருப்பன்.

வடகிழக்கில் அதாவது ஈசான மூலையில் ருத்திரன் விருஷப வாகனத்தின்மேல் ஆரோகணித்து திரிசூலம் முதலிய பல திவ்விய ஆயுதங்களைப் பூண்டு பார்வதீ தேவியோடு திரிபுரசுந்தரீ ஸேவாபரனுய்ப் பிரகாசித்துக் கொண்டிருப்பான்.

மேற்கூறிய அஷ்ட திக்பாலகர்கள் முத்துக் கோட்டைக்கும் இந்திர நீலமணிக் கோட்டைக்கும் இடையே வாஸஞ் செய்துகொண்டிருப்பார்கள் என்று அறியத் தக்கது.

16. மரகதக் கோட்டை

கோபுரங்களோடும் மற்றச் சிறப்புக்களோடுமுள்ள இம்மரகதக் கோட்டைக்கும் பதினைந்தாவதான முத்துக் கோட்டைக்கும் இடையிலுள்ள பிரதேசமானது மரகத மயமாய் விளங்கும். இதில் மதுகடங்களையுடைய பொற்

பனைமரங்களும், தோட்டங்களும், தோப்புகளும், மாளிகைகளும் உள்ளன. மேலும் அங்கே மரகதப் பச்சைக் கற்களாற் கட்டப்பட்ட சியாமளா தேவியின் மாளிகையும், தண்ட நாயகியாகிய வாராஹீ தேவியின் மாளிகையும் உண்டு. பச்சைக் கற்களால் இழைக்கப்பட்ட அவ்வாராஹீ தேவியின் அரண்மனையில் நூறு தூண்கள் கொண்ட மண்டபத்துள் தங்கமயமான பீடத்தில் பொற்றாமரைப் புஷ்பம் ஒன்றுள்ளது. அப்புஷ்பத்தின் கர்ணிகையில் பிந்து, திரிகோணம், வட்டம், அறுகோணம், இரண்டு விருத்த (வட்ட)ம் இவைகளோடு 110 அக்ஷரங்களையுடைய சக்கிரத்தில், வராஹ முகத்தையும், தாமரையிதழ் போன்ற கண்களையும், சந்திர கிரீடத்தையும், உருக்கி வார்த்த தங்கம்போன்ற ஒளியை உடைய சரீரத்தையும் அந்திச் சிவப்பையும், சிவந்த மலர் மாலைகளையும், கலப்பை, உலக்கை, சங்கம், சக்கிரம், பாசம், அங்குசம், அபயம், வரதம் இவைகளால் சோபிக்கும் கைகளையும், உடைய மஹா வாராஹீயானவள், உன்மத்த, கபால, பீஷண, டமருபாஸ்கர, ரவிபக்ஷக, கால, சண்ட, மஹாமந்தானர்களென்னும் அஷ்ட பைரவர்கள் புடைசூழ, ஜம்பினி முதலிய சேனைகளோடு கூடி வீற்றிருப்பாள்.

17. பவழக் கோட்டை :—

இது பவழங்களாற் செய்த அநேக கோபுரங்களும், பதுமைகளும், துவஜங்களும், உடைத்தாய் மிக்க ரமணீயமாயிருக்கும். இதற்கும் பதினாறுவது கோட்டைக்கும் இடையிலுள்ள ஸ்தலத்தில் உருக்கிச் சாய்த்த தங்கம்போற் பிரகாசிக்கும் அனேக ஸ்தானங்களும் உத்தியான வனங்களும், சிறந்து விளங்குவனவாயிருக்கும். அங்கே சிவப்பு நிறமுள்ள யோகினிக் கூட்டங்கள் வசிக்கும்.

18. நவரத்தினப் பிராகாரம் :—

இக்கோட்டையும் இதர கோட்டைகளைப் போன்று பல சிறப்புக்களை யுடையதாய் விளங்கும். இதற்கும் பதினேழாவது கோட்டைக்கும் இடையில், தனது காந்தியினால் பத்துத் திக்குகளையும் பிரகாசிப்பிக்கச் செய்யும் மாணிக்க மண்டபமுண்டு. அதில் நீலமேக நிறமும், செந்தாமரை மலரைப் போன்ற கண்களும், வைஜயந்தீ வனமாலைகளுக்கும், கௌஸ்துப மணிக்கும், மஹா லக்ஷ்மிக்கும், இருப்பிடமாகிய அகன்ற மார்பும், சங்கத்தைச் செயிக்கும் கண்டமும் உடைத்தாய்க் கிரீடம் மகர குண்டலம் முதலிய பல ஆபரணங்கள் விளங்க, பீதாம்பரதாரியாய்ச் சங்கம் சக்கிரம் முதலிய ஆயுதங்களைத் தரித்து, கருடவாகனரூடராய் பிரஹ்லாத, புண்டரீக, நாரதாதி பக்த ரக்ஷகராயும், துஷ்டராக்ஷஸ சிக்ஷகராயுமுள்ள மஹா விஷ்ணு, திரிபுரசுந்தரீ ஆராதனையில் தற்பரராய் வீற்றிருப்பார்.

19. நாநாரத்தினப் பிராகாரம் :—

இது சந்திரமண்டலத்தைத் தொடும்படியான மணிச் சிகரங்களையும், கோபுரங்களையும், மற்றுமுள்ள பல சிறப்புக்களையும் உடைத்தாய் விளங்கும்.

இதற்கும் பதினெட்டாவது கோட்டைக்கும் இடையேயுள்ள ஸ்தலமானது ரத்தினமாளிகைகளாலும் உத்தியான வனங்களாலும் சூழப்பட்டிருக்கும். அன்றியும், இங்கே பொன்னால் செய்யப்பட்ட ஆயிரக்கால் மண்டபம் ஒன்றுண்டு. இதில் சந்திரசேகரனும், பவானீ சமேதனுமான ஈசானன், நந்தி, பிருங்கி முதலிய சிவ கணங்களும், உருத்திர கணங்களும், புடைசூழ திரிபுரஸுந்தரியை வணங்கிக்கொண்டு மஹா ஆனந்தத்தோடு வசிப்பான்.

20. மனோமய ப்ராகாரம் :—

இக்கோட்டைக்கும் பத்தொன்பதாவது கோட்டைக்கும் இடையேயுள்ள பிரதேசமானது ஸ்வர்ண மயமாய்ப் பிரகாசித்து அநேக சந்தனவனங்களோடு கூடி விளங்கும். அங்கே முத்துமயமான அன்னப் பக்ஷிகளும், இந்திர நீலம் போன்ற வண்டுகளும், நிறைந்துள்ளதும், சஞ்சலமாகிய பல தரங்கங்களையுடையதுமான அமிர்தவாபிகை யொன்றுள்ளது. இவ்வாபியில் முத்து மணிகளாற் செய்யப்பட்ட ஓடத்தின்மீது சிந்தூர பாடல நிறமான அங்கங்களையுடையவளும், சந்திர கலையைச் சிரசில் அணிந்தவளும் பூர்ண சந்திரனைப்போன்ற முகத்தையுடையவளும், தளிர்போற் சிவந்த கீழுதட்டில் பிரகாசிக்கும் மந்தஹாஸத்தையுடையவளும், யௌவன லக்ஷணத்தையுடையவளுமான தாரா தேவி பல சக்திகளாற் சூழ வசித்துக்கொண்டிருப்பாள்.

21. புத்திமயப் பிராகாரம் :—

இது மிகவும் பரிசுத்தமாய் விளங்கும். இதற்கும் மனோமயக் கோட்டைக்கும் இடையில் ஆநந்தவாபிகை யுள்ளது. இவ்வாபிகைக்குக் கெம்புக்களாலாக்கிய படிகளுண்டு. பிரும்மானந்தத்தை யருளச் செய்யும் சிறப்பினை வாய்ந்த இவ்வாபிகையில் மாணிக்க மயமான தோணியின் மேல் வாருணீ தேவி வீற்றிருப்பாள். இவ்வாருணீ தேவி பல ஆபரணங்களைப் பூண்டு, கருணை பெருகும் கடைக் கண் பார்வையையுடையவளாய்ப் பல்லாயிரந் தோழிகள் துடுப்புகளைக் கையில் பூண்டு படகைச் செலுத்திக்கொண்டும் ஆனந்தமாய்ப் பாடிக்கொண்டு மிருப்பார்கள்.

22. அஹங்காரக் கோட்டை :—

இது மிகவும் உன்னதமாய், மற்றக் கோட்டைகளைவிட அதிகச் சிறப்புகளை யுடையதாய் விளங்கும். இதற்கும்

புத்திமயக் கோட்டைக்கும் இடையில் நறுமணமும் குளிர்ச்சியுமுடைய தென்றற் காற்று மெல்ல வீசிக்கொண்டிருக்கும். அன்றியும் கரைகளின் மேல் மோதிக்கொண்டிருக்கும் அலைகளையும், பக்ஷி ஜாலங்களும், வண்டுகளும், பரமாநந்தத்தினுற் செய்யும் கோலாகல சப்தத்தையும் உடைய விமர்ச வாபிகை ஒன்று அங்கு உண்டு. அவ்வாபிகையில் நடுவே ஓரிரத்தின மயமான ஓடத்தின்மீது புங்கன் தளிரைப் போன்று கருநிறமுள்ள சரீரத்தோடும் மதிவதனத்தோடும், அங்கயற்கண்களோடும், பூர்ண சந்திரிகையைப் போன்ற மந்தஹாஸத்தோடும். செஞ்சந்தனக் குழம்பு பூசப்பட்ட மார்பினேடும் துடி போன்ற இடையோடும் விளங்கும் குருகுள்ளா தேவியானவள் பல்லாயிரம் சுந்தரத் தோழிகள் தன்னைச் சுற்றிப் பணிவிடை செய்ய நாணேற்றிய வில்லைக் கையில் தாங்கி விளங்குவாள்.

23. சூரியப் பிராகாரம் :—

இது பதினான்கு லோகங்களையும் பிரகாசிப்பித்துக் கொண்டிருக்கும். இதற்கும் இருபத்திரண்டாவது கோட்டைக்கும் இடையில், பேரொளிவீசும் மாணிக்க மண்டபத்தில இரத்தின ஸிம்ஹாஸனத்தின் மேல் சுவர்ண மயமான பத்மத்தின் நடுக் கர்ணிகையில் செம்மலர்களாலாக்கிய மாலையைப் பூண்டு, கிரீட குண்டலங்கள் துலங்கச் செஞ்சந்தனம் மேனியிற் பூசிக்கொண்டு சக்ஷுஷ்மதீ, சாயாதேவி யென்னும் தேவிகளோடு கூடி, மார்த்தண்ட பைரவன் (சூரிய மூர்த்தி) வசிப்பான்.

24. சந்திரப் பிராகாரம் :—

இது நேத்திராநந்தமாய் விளங்கும். இதன் மேற்பாகத்தில் பனிமலையைப்போல் வெண்மையும் தண்மையும் உடைய நிலவும், நக்ஷத்திரக் கூட்டங்களும் உண்டு.

அவற்றின் நடுவே ஸுதாநிதியாகிய சந்திரன் பேரானந்தத்தோடு வாழ்ந்து கொண்டு இருப்பான்.

25. சிருங்காராவரணம் :—

இது சுவர்ண, ரஜத, இரத்தின மயமான சிகரங்களையும், கோபுரங்களையும் துவஜங்களையும் உடையது. இதற்கும் இருபத்திநான்காவது கோட்டைக்கும் இடையில் ரமணீயமான மாடங்களும் (மாளிகைகள்) உபவனங்களும் இன்னோரன்ன பல சிறப்புக்களும் உள்ளன. இக்கோட்டையைச் சுற்றிச் சிருங்காரப்பரிகை (அகழ்) ஒன்றுண்டு. இதற்கு அதிபதியாகிய மன்மதன் அவ் வகழியின் கரையில் உள்ள மணிமயமான உப்பரிகையின் மீது சிருங்கார தேவதைகளோடு கூடி வசித்துக் கொண்டிருப்பான்.

இருபத்தைந்தாவது கோட்டைக்கும் உள்ளே ஸர்வ தெய்வப் பெண்களால் போற்றப்படும் சிந்தாமணி மயமான பிராகாரம் ஒன்றுண்டு. இதற்கும் சிருங்காரக் கோட்டைக்கும் இடையில் மஹா பதும வனம் ஒன்றுள்ளது. இம் மஹாபத்ம வனத்தினிடையே சிந்தாமணி கிருஹராஜம் உள்ளது. அக்கிருஹத்தில், பரதேவதையின் பூஜைக்குரித்தான ஐந்து பாத்திரங்கள் உண்டு. (அவை சங்கபாத்திரம், ஸ்ரீ பாத்திரம், பலி பாத்திரம், பாத்ய, அர்க்கிய, ஆசமனாதி பாத்திரம், தீர்த்தபாத்திரம்) ஒவ்வொரு பாத்திரமும், அக்கினி மண்டல சொரூபமான ஆதாரத்தையும், சூரிய மண்டல ரூபமான பாத்திரத்தையும், ஸோம மண்டல மயமான அமிர்தத்தையும் உடையதாய்ப் பிரஹ்ம, விஷ்ணு, ருத்திர, மகேஶ்வர, ஸதாசிவ கலைகளோடும், பஞ்ச ரத்தினங்களோடுங் கூடி கந்த புஷ்பாக்ஷதைகளால் அலங்கரிக்கப்பட்டு வேதோக்த ஸூக்தங்களால் தூய்மையாக்கப்பட்டு விளங்கிக்கொண்டிருக்கும்.

இத்தகைய பூஜாபாத்திரங்களுக்குக் கீழ், மஹா திரிபுரஸுந்தரீ சரணாரவிந்த ஸேவாபரர்களான பிரஹ்ம விஷ்ணு, ருத்திர, மகேச்வர, ஸதாசிவர்களின் இல்லங்கள் விளங்கிக் கொண்டிருக்கும்.

மஹா திரிபுரசுந்தரியின் அரண்மனையாகிய சிந்தாமணி கிருஹத்தின் அக்கினி மூலையில் அப்பராதேவதையின் உற்பத்தி ஸ்தானமானதும், பேரொளியோடு கொழுந்து விட்டு எரிந்துக் கொண்டிருப்பதுமான சிதக்கினி குண்டமும், நிருதி மூலையில் பரதேவதையின் திவ்விய ரதமும், வாயுமூலையில் சியாமளா தேவியின் தேரும், ஈசான மூலையில் ஸேநா நாயகியாகும் மஹாவாராஹீ தேவியின் ரதமும் விளங்கும்.

அன்றியும் மேற்படி சிந்தாமணி கிருஹத்தின் கிழக்குத் துவாரத்தின், வலது பக்கத்தில் மந்திரிணீயாகிய சியாமளாதேவியின் கிருஹமும், ஷை துவாரத்தின் இடது பக்கத்தில் ஸேநாநாயகியாகிய வாராஹியின் கிருஹமும் உள்ளன.

கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, என்னும் நான்கு திக்குகளின் துவாரங்களில் சதுராம்நாய தேவதைகள் சதுரங்க சேனைகளோடு கூடிக் காவல் பூண்டிருப்பார்கள். இத்தகைய மஹா மஹிமையோடு விளங்குவதுதான் ஸ்ரீ சக்ர நகரமாகும். இந்நகரமே ராஜராஜேச்வரியின் தேஜோமயமான கிருஹமாகும்.

இக் கிருஹ ராஜத்தின் நடுவில் பிரஹ்மா, விஷ்ணு, உருத்திரன், மகேச்வரன் கால்களாகவும், ஸதாசிவம் பலகையாகவும் விளங்கும் பஞ்சப்பிரஹ்ம மஹா சிங்காதனத்தின்மேல் "ஸர்வாநந்த மய பிந்து பீடம்" ஒன்றுள்

ளது. இப்பிந்து பீடத்தின் மேலேதான் பரதேவதை வீற்றிருப்பது. இப்பிந்து பீடத்தின் கீழ், எட்டுச் சக்கிரங்களுண்டு. இவ் வெட்டுச் சக்கிரங்களோடுள்ள பிந்துபீடமே ஸ்ரீ சக்கிரம் எனப்படும்.

ஸ்ரீ சக்கர விளக்கச் சுருக்கம்

1. முதலாவது த்ரைலோக்ய மோஹன சக்கிரம்:—

இது நாற்சதுரமாய் மூன்று பிராகாரங்களோடு விளங்கும். இது முதலாவது ஆவரணமாகும். இதன் முதல் ரேகையில் பரதேவதையின் தேஹ காந்திகளையே சரீரமாகத் தரித்த அணிமா, மஹிமா, இலகிமா, ஈசித்வ, வசித்வ, ப்ராகாம்ய, புக்தி, இச்சா, பிராப்தி, ஸர்வகாம மென்னும் தச ஸித்தி தேவதைகளும், இரண்டாவது ரேகையில் பிராஹ்மீ, மாஹேஸ்வரீ, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹீ, மாஹேந்திரீ, சாமுண்டா, மஹாலக்ஷ்மீ என்னும் அஷ்ட மாத்ருகைகளும், மூன்றாவது ரேகையில் ஸர்வஸம்க்ஷோபிணீ, ஸர்வவித்ராவிணீ, ஸர்வாகர்ஷிணீ, ஸர்வவசீகரிணீ, ஸர்வோந்மாதினீ, ஸர்வமஹாங்குசீ, ஸர்வகேசரீ, ஸர்வபீஜ, ஸர்வயோனி, ஸர்வத்ரிகண்டா என்னும் பத்து முத்ரா தேவதைகளும் வசித்துக்கொண் டிருப்பார்கள். இவர்களின் சரீர காந்திகள் சூரியனையும் தோற்றுவிக்கும் படியானவை. இவைகளுக்குப் பிரகட யோகினிகள் என்று பெயர். இவர்களுக்கெல்லாம் நாயகியாகிய திரிபுரை யென்னும் சக்ரேஸ்வரி அக்ர (முன்) பாகத்தில் ரத்ன ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்து யோகினீ கணங்கள் புடைசூழப் பேரானந்தத்தோடு விளங்குவள்.

2. இரண்டாவது ஸர்வாசா பரிபூரக சக்கிரம் :—

இது பதினாறு தளங்களையுடைய கமலமாகும். இதில் காமாகர்ஷிணீ, புத்யாகர்ஷிணீ, அஹங்காராகர்ஷிணீ, சப்தாகர்ஷிணீ, ஸ்பர்சாகர்ஷிணீ, ரூபாகர்ஷிணீ, ரஸாகர்ஷிணீ, கந்தாகர்ஷிணீ, சித்தாகர்ஷிணீ, தைர்யாகர்ஷிணீ, ஸ்மிருத்யாகர்ஷிணீ, நாமாகர்ஷிணீ, பீஜாகர்ஷிணீ, ஆத்மாகர்ஷிணீ, அம்ருதாகர்ஷிணீ, சரீராகர்ஷிணீ, என்னும் பதினாறு ஆகர்ஷிணீ தேவதைகள் வசிப்பார்கள், இவர்களுக்குக் குப்த யோகினிகள் என்று பெயர். இவர்களுக்கெல்லாம் பிரபுவாய் திரிபுரேசீ யென்னும் சக்ரேச்வரீ தேவி மணிபீடத்தின்மேல் வீற்றிருந்து ஆவரண தேவதைகள் வணங்க ஆனந்தமாய் இருப்பாள்.

3. மூன்றாவது ஸர்வ ஸம்க்ஷோபண சக்கிரம் :—

இது எட்டிதழ்ப் பதுமம். இந்த தளங்களில் குப்ததரயோகினிகள் என்னும் பெயரையுடைய அநங்ககுஸுமா, அநங்கமேகலா, அநங்கமதனா, அநங்கமதனாதுரா, அநங்கரேகா, அநங்காங்குசா, அநங்கவேகினீ, அநங்கமாலினீ என்னும் எட்டு சக்திகள் பாசம், அங்குசம், வரதம், அபயம் என்பவற்றைக் கையில் தாங்கிச் செம்மையான வஸ்திரங்களையும், புஷ்ப மாலைகளையும் தரித்துக்கொண்டு மஹா திரிபுரசுந்தரீ தேவியின் தியானத்தில் ஒரு முகப்பட்ட மனத்தர்களாய் விளங்குவார்கள். இவர்களுக்கெல்லாம் நாயகியாகிய திரிபுரசுந்தரீ யென்னும் சக்ரேச்வரீ, சக்ரதேவதைகள் சேவிக்க முன்னருள்ள சிம்மாஸனத்தில் வீற்றிருப்பாள்.

4. நான்காவது ஸர்வ ஸௌபாக்ய தாயக சக்கிரம் :—

இந்த சக்கிரம் பதினான்கு முக்கோணங்களை யுடையது. அந்த முக்கோணங்களில் ஸர்வஸம்க்ஷோபிணீ,

ஸர்வவித்ராவிணீ, ஸர்வா கர்ஷிணீ, ஸர்வாஹ்லாதினீ, ஸர்வஸம்மோஹினீ, ஸர்வஸ்தம்பிநீ, ஸர்வஜ்ரும்பிணீ, ஸர்வவசங்கரீ, ஸர்வரஞ்சனீ, ஸர்வோந்மாதினீ, ஸர்வார்த்தஸாதனீ, ஸர்வஸம்பத்திபூரணீ, ஸர்வமந்த்ரமயீ, ஸர்வத்வந்த்வக்ஷயங்கரீ, என்னும் நாமங்களையுடைய பதினான்கு ஸம்பிரதாய யோகினிகள் வசிப்பார்கள். இவர்களுக்கெல்லாம் பிரபுவாய் திரிபுரவாஸினி யென்னும் சக்ரேச்வரீ அவ்வாவரண தேவதைகள் புடைசூழ மணிமயமான ஆஸனத்தின்மேல் அமர்ந்து விளங்குவாள்.

5. ஐந்தாவது ஸர்வார்த்த ஸாதக சக்கிரம் :—

இது பஹிர்த்தசாரம் என்னும் வெளியேயுள்ள பத்து முக்கோணங்களையுடைய சக்கிரமாகும். இக்கோணங்களில் குளோத்தீர்ண யோகினிகள் என்னும் பெயரையுடைய ஸர்வஸித்திப்ரதா, ஸர்வ ஸம்பத்ப்ரதா, ஸர்வப்ரியங்கரீ, ஸர்வமங்களகாரிணீ, ஸர்வ காமப்ரதா, ஸர்வ துக்கவிமோசனீ, ஸர்வமிருத்யுப்பிரசமனீ, ஸர்வ விக்கின நிவாரணீ, ஸர்வாங்க சுந்தரீ, ஸர்வ ஸௌபாக்ய தாயினீ என்னும் பத்து தேவதைகள் பரிவார ஸமேதர்களாய் வாஸஞ் செய்து கொண்டிருப்பார்கள். இவர்களுக்கெல்லாம் ஈசையாய்த் திரிபுராஸ்ரீ என்னும் சக்ரேச்வரீ, பரிவார தேவதைகள் போற்ற, ஸ்வர்ண சிம்மாஸனத்தின் மேல் வீற்றிருப்பாள்.

6. ஆறுவது ஸர்வ ரக்ஷாகர சக்கிரம் :—

இது, உள்ளேவுள்ள பத்து முக்கோணங்களை யுடையது. இவற்றில் உள்ள ஆவரண தேவதைகளுக்கு நிகர்ப்ப யோகினிகள் என்று பெயர். இவர்கள் ஸர்வக்ஞா, ஸர்வசக்தி, ஸர்வ ஐச்வர்யப்பிரதா, ஸர்வஞானமயீ, ஸர்வ வியாதி விநாசினீ, ஸர்வாதார ஸ்வரூபா, ஸர்வபாபஹரா,

ஸர்வாநந்தமயீ, ஸர்வரக்ஷாஸ்வரூபிணீ, ஸர்வேப்ஸித பலப்ரதா என்னும் திருநாமங்களை யுடையவராவர். இவர்கள் ஜபமாலையையும் புஸ்தகத்தையும் கையில் தாங்கிப் பச்சைக் கற்பூரம் போன்ற வெண்மையான திருமேனியை யுடையவராய் விளங்குவார்கள். இவர்களுக்கெல்லாம் நாயகியாய்த் திரிபுராமாலினீ யென்னும் சக்ரேச்வரி, சக்ர தேவதைகள் பணிய, ரத்தின ஸிம்மாதனத்தின்மேல் வீற்றிருப்பாள்.

7. ஏழாவது ஸர்வரோக ஹர சக்கிரம்:—

இந்த சக்கிரமானது எட்டு கோணங்களை யுடையது. இக்கோணங்களில் வசினீ, காமேச்வரீ, மோதினீ, விமலா, அருணா, ஜயினீ, ஸர்வேச்வரீ, கௌளினீ என்னும் பெயர்களை யுடைய ரஹஸ்ய யோகினிகள் வசித்துக்கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு வாக்தேவதைகளென்றும் வேறு பெயருண்டு. இவ்வாவ்ரண தேவதைகளின் நாயகியாகிய திரிபுரா ஸித்தாம்பாள் என்னும் சக்ரேச்வரியானவள் மஹாபீடத்தின் மேல் வீற்றிருப்பாள்.

8. எட்டாவது ஸர்வ ஸித்திப்ரதாயக சக்கிரம்:—

இது மத்தியிலுள்ள முக்கோணமாகும். இந்த முக்கோணத்திற்கும் அஷ்டகோணத்திற்கும் இடையில் வலது பாகத்திலும் இடது பாகத்திலும் மேல் பாகத்திலும் மூன்று நாற்கோணங்கள் உண்டு. இந்த நாற்கோணங்களில் ஸகல அஸ்த்ர தேவதைகளும், தனுசு, பாணங்கள், பாசம் அங்குசம் முதலிய ஆயுத தேவதைகளும் வசித்துக்கொண்டிருப்பார்கள். முக்கோணத்தில் தனக்கு அதாவது ஸாதகனுக்கு எதிர்முகமாயுள்ள கோணத்திலுள்ள காமகிரி ஆலயத்தில் அக்கினி மயமான காமகிரி பீடத்தின் மேல் வாக்பவபீஜ ஸ்வரூபிணியும், காதி வித்யா மய

பிரஹ்மாத்மக சக்தியுமாகிய மஹா காமேஶ்வரீ தேவீ யானவள், பாசம், அங்குசம், அம்ருத கலசம், கபாலம், வரத அபய முத்திரைகள் இவைகளைத் தனது ஆறு கரங்களிலும் உடைத்தாய், பூஷணங்களின் மணித் திரட்கதிர்கள் நாற்றிசைகளிலும் பரந்தொளிரத் திவ்வியவஸ்த்ர, கந்த, புஷ்ப மாலைகளைத் தரித்துக்கொண்டு சதுரங்க சேனைகளுடன் மித்ரேசநாத, நவயோனி சக்கிர, ஆத்ம தத்துவ, சிருஷ்டி கிருத்திய, இச்சா சக்தியோடு கூடி விளங்குவாள்.

வலது கோணத்தில் ஹாதிவித்யா ஸ்வரூபிணியாய் சூரியமண்டலமாகும் ஜாலந்தர பீடத்தில் ஷஷ்டீசநாதரோடு கூடி உள், வெளித் தசாரங்கள் இரண்டிற்கும் பதினான்கு கோணத்திற்கும் நாயகியாய் வித்தியா தத்துவ, ஸ்திதி கிருத்திய, ஞானசக்தி ஸ்வரூபிணியாய், காமராஜாத்மக காமகலா ஸ்வரூபிணியாய், பிரஹ்மாண்ட கோடிகளைச் சிருஷ்டிக்கவும், காக்கவும் ஆற்றலுள்ளவளாய்ச் சகல பரிவாரங்கள் புடைசூழ விஷ்ணு சக்தியாய் விளங்கித் தனது ஆறு கரங்களிலும் பாசம், அங்குசம், பாணம் வில், புஸ்தகம், ஜபமாலைகள் விளங்க, வஜ்ஜிரத்தைப்போல் பிரகாசிக்கும் திருமேனியையுடைய மஹா வஜ்ரேஶ்வரீ மகா வைபவத்துடன் வீற்றிருப்பாள்.

இடது கோணத்தில் ஸாதி வித்தியா ஸ்வரூபிணியாய்ச் சந்திர மண்டல ரூப பூர்ணகிரி பீடத்தில், உட்டீசானந்த நாதரோடு கூடி நாற்கோணம், பதினாறு இதழ், எட்டு இதழ் பதுமங்கள் இவைகளுக்கு நாயகியாய்ச் சிவ தத்துவ, ஸம்ஹார கிருத்திய, கிரியா சக்தி, சக்திபீஜ ஸ்வரூபிணியாய், ருத்திராத்மக சக்தியாய்ப் பூர்ண சந்திரனை யொத்த திருமேனியை யுடையவளாய்த் தனது ஆறு கரங்களிலும் வில், அம்பு, பாசம், அங்குசம், புத்தகம், அபய

முத்திரைகளைத் தரித்தவளாய், மணிமயமான பூஷணங்களையும், உடைகளையும் பூண்டு மஹாபகமாலினி என்னும் தேவி வீற்றிருப்பாள்.

இவர்களுக்கு அதிரஹஸ்ய யோகினிகள் என்று பெயர். இம்மூவருக்கும் அதாவது மஹா காமேச்வரீ, மஹா வஜ்ரேச்வரீ, மஹா பகமாலினிகளுக்கு நாயகியாகிய திரிபுராம்பா சக்கிரேச்வரீ முக்கோணத்தின் எதிர்க் கோணத்திலுள்ள இரத்தின சிம்மாதனத்தின்மேல் வசிப்பள்.

9. ஒன்பதாவது ஸர்வாநந்தமய சக்கிரம் :—

முக்கோணத்தின் மத்தியில் பிரஞ்ஞான ஸ்வரூபமாயும், யோகிகளால் தியானித்தற்குரியதாயுமுள்ள ஸர்வாநந்த மயமென்னும் பிந்து சக்கிரத்தில் மாயா மயங்களாகும் கயிறுகளால் கட்டப்பட்டிலகும் கறுப்புப் பட்டுத் திரை (திரஸ்கரணி)யும், மல்லிகை, முல்லை முதலிய நறுமணப் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பஞ்சப் பிரஹ்ம மஹா மஞ்சமும் அதன்மேல் விரித்துள்ள இலவம்பஞ்சு மெத்தையும், சிவ தத்துவம் முதல் பிரிதிவி தத்துவம் ஈறுகவுள்ள முப்பத்தாறு தத்துவ ரூபமான படிகளும் ஸதாசிவ ரூபமான பட்டுத் தலையணைகளும் விளங்கும். இத்தகைய மகிமை வாய்ந்த மஞ்சத்தின்மேல் திரிலோக சுந்தரனும் காமேச்வரனுமான பரப்ரஹ்மம், பாசம், அங்குசம், கரும்புவில், புஷ்ப பாணங்களைத் தனது நான்கு கைகளிலும் தரித்துக்கொண்டு திவ்விய வஸ்திர பூஷணங்களை அணிந்து; அழகில் மிக்க அறமாதர் பலர் வெஞ்சாமரை வீசிக்கொண்டும், இனிய வீணாகானம் செய்து கொண்டும், இன்னும் இவ்விதமான பல உபசாரங்களைச் செய்துகொண்டும் சூழ்ந்து நிற்க, மஹா வைபவத்தோடு

அமர்ந்திருப்பார். அவருடைய இடது தொடை யென்னும் மஹாபீடத்தின் மேல் த்ரிலோக மோஹினியும், சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களுக்கும் காரணமானவளும், ஸர்வதந்திர ஸ்வதந்திரையும், சாந்த ரஸ ஸ்வரூபிணியும், ஸகல லோக மாதாவும், சிறந்த வஸ்திர பூஷண புஷ்ப மாலைகளை யணிந்தவளும், குங்குமப் பூவைப்போன்ற திருமேனியை யுடையவளும் ஸமஸ்த சக்கிர பரிவார ஸமேதையும், பரப்ரஹ்ம சக்கிர மயமானவளும் மஹா ஒட்டியாண பீட ஸ்வரூபிணியும், சர்யாநந்த நாதாதிகளோடு கூடி விளங்குபவளும், ஸர்வத்திற்கும் நாயகியுமான மஹா த்ரிபுரஸுந்தரீ தேவி விளங்குவாள்.

இப் பிந்துவோடு கூடிய முக்கோணத்தின் மேலுள்ள நாற்கோணத்தில், ஸாதகனுடைய வலப் பக்கத்திலிருந்து இடது பக்கமாக மூன்று ரேகைகள் உண்டு. இந்த மூன்று ரேகைகளில் குருமண்டல தேவதைகள் வீற்றிருப்பார்கள். ஒன்று என்று குறிப்பிட்ட மேல் ரேகையில் திவ்விய ஒக குரு மண்டலமும், இரண்டாம் ரேகையில் வித்த ஒக குருமண்டலமும், மூன்றும் ரேகையில் மானவ ஒக குருமண்டலமும் விளங்கும்.



இத்திவ்விய, வித்த, மானவ ஒகக் குரு மண்டல தேவதைகளின் பெயர்கள், அவரவர்கள் ஸம்பிரதாயத்திற்கேற்ப பேதப்படும். இச் சம்பிரதாயங்கள் பலவகைப் படும்; அவற்றுள் காதி வித்யா ஸம்பிரதாயம், ஹாதி வித்யா ஸம்பிரதாயம், ஸாதிவித்யா ஸம்பிரதாயம், மஹா

ஷோடசீ ஸம்பிரதாயம், பராஸம்பிரதாயம் என்பவை முக்கியமானவையாகும். இக்குரு மண்டலத்தின் மூன்று கோடுகளில் மானவ ஓகக் கோட்டில், ஸாதகன், தனது குருவையும் ஸித்த ஓகக் கோட்டில் தனது பரம குருவையும், திவ்விய ஓகக் கோட்டில் தனது பரமேஷ்டி குருவையும் பாவித்து பூஜித்தல் வேண்டும்.

நித்தியா தேவதைகள்:—

மத்திய முக்கோணத்தில் மூன்று கோடுகளிலும், ஒவ்வொரு கோட்டிலும் அவ்வைந்து தேவதைகள் வீதம் பதினைந்து தேவதைகள் விளங்குவார்கள். இப்பதினைந்து நித்தியா தேவதைகளுக்கும், காமேச்வரீ, பகமாலினீ, நித்யக்லின்னே, பேருண்டா, வஹ்னிவாஸினி, மஹா வஜ்ரேச்வரி, சிவதூதீ, த்வரிதை, குளஸுந்தரீ, நித்தியை, நீலபதாகா, விஜயா, ஸர்வமங்களா, ஜ்வாலா மாலினீ, சித்ரா என்பன பெயர்களாகும். பதினாறுவது நித்யை மஹா நித்யை யாகும். இம் மஹா நித்யா தேவியைப் பிந்துவில் பாவித்தல் வேண்டும்.



அன்றியும் அம்மத்தியத் திரிகோணத்தின் நாற்றிசைகளிலும் காமேஸ்வர காமேஸ்வரிகளின் ஆயுதங்களான பஞ்சபாணங்கள், தனுசு, பாசம், அங்குசம் என்னும் ஆயுத தேவதைகள் விளங்குவார்கள்.

இங்ஙனம் ஸ்ரீ சக்கிர விளக்கமும் ஆவரண தேவதைகளின் பெயர்களும் ஒருவாறு சுருக்கமாய்க் கூறப்பட்டன.

இனி நமது சரீரத்தில் ஸ்ரீ சக்கிர பாவனை செய்யும் கிரமத்தைச் சற்று விவரிப்போம்:

बैन्दवं ब्रह्मरन्ध्रे च मस्तके च त्रिकोणकम् ।
ललाटेऽष्टारपत्रं च भ्रुवोर्मध्ये दशारकम् ॥
बहिर्दशारं कंटे तुमन्वश्रं हृदिसंस्थितम् ।
नाभौ च वसुपत्रं च कट्यां षोडश पत्रकम् ॥
वृत्तत्रयं च ऊरुभ्यां पादयोः चतुरश्रकम् ।

என்னும் பிரமாணப்படி

நமது சரீரத்தில் :—

பிரஹ்ம ரந்த்ரம்	—	பிந்துஸ்தானம்.
மஸ்தகம் அல்லது சிரசு	—	திரிகோணம்.
லலாடம் அல்லது நெற்றி	—	அஷ்டகோணம்.
ப்ருமத்தியம் (புருவமத்தி)	—	அந்தர்த்தசாரம்.
கண்டம் அல்லது கழுத்து	—	பஹிர்த்தசாரம்.
ஹ்ருதயம் (மார்பு)	—	மந்வச்ரம் அல்லது பதினான்கு கோணம்.
நாபி (தொப்புள்)	—	அஷ்டதள பத்மம்.
கடி (இடுப்பு)	—	ஷோடசதள பத்மம்.
ஊரு (தொடைகள்)	—	விருத்தத்ரயம்.
பாதங்கள்	—	பூபுரம்.

ஆகப்பாவித்தல் வேண்டும்.

இது, சரீரத்தில் வெளிப்படையான அங்கங்களில் ஸ்ரீ சக்கிர பாவனையாம். மூலாதாராதி சக்கிரங்களில் ஸ்ரீ சக்கிரத்தைப் பாவிப்பதும் உண்டு. அது எங்ஙனமெனின் :—

1. மூலாதாரத்திற்குக் கீழ் உள்ள ஸ்ஹஸ்ராரம்		பூபுரம்.
2. அதற்குமேல், விஷுவமென்னும் ஆறிதழ்ச் சக்கிரம்—		பதினாறு தளபத்மம்.
3. மூலாதாரம்	—	அஷ்டதளபத்மம்
4. ஸ்வாதிஷ்டானம்	—	சதுர்த்தசாரம்.
5. மணிபூரகம்	—	பஹிர்த்தசாரம்.
6. அநாஹதம்	—	அந்தர்த்தசாரம்.
7. விசுத்தி	—	அஷ்டகோணம்.
8. உள்நாக்கு (இந்திரயோனி)	—	மத்திய முக்கோணம்.
9. ஆஞ்ஞை	—	பிந்து.
10. பிரஹ்மரந்திரம்	—	மஹா பிந்து.

இங்ஙனம் ஸ்ரீ சக்கிரத்திற்கும் சரீர சக்கிரத்திற்கும் ஐக்கியம் செய்தல் அவசியம்.

ஸ்ரீ சக்கிரமானது பரப்பிரஹ்மமாகும் பரதேவதையின் ரதமாதலின் அது சரீரமே யாகும்.

"आत्मानं रथिनं विद्धि शरीरं रथमेव च"

என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. ஸ்ரீ நகரமும் அதுவே யாகும். இவ்விஷயம் பாவநோபநிஷத்தில் நன்கு கூறப்பட்டிருக்கிறது. அதன் சுருக்கம் இங்கு கூறப்படும்:—

1. ஸ்ரீ குரு நாதரே மேலாகிய காரணமாகும் சிற்சக்தியாகும். இத்தகைய விமரிச சக்தியானது தேகத்தில் இரு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு நாசித் துவாரங்கள், வாய், பாயு, உபஸ்தம் என்னும் ஒன்பது துவாரங்களின் மூலமாய் ஸ்புரிக்கின்றது. ஆதலின் இவ்வொன்பது துவாரங்களும் குருஸ்வரூபமானவை.

2. நவ சக்கிர மயமாய் விளங்கும் ஸ்ரீ சக்கிரமே தேகமாகும்.

3. சரீரத்திலுள்ள அஸ்தி (எலும்பு) தாதுவே வாராஹீயாகும். மாமிசமே குருகுள்ளாதேவியெனப் படுவள். வாராஹீ பிதா; குரு குள்ளாவாகிய பலி தேவதையே த்தாய்.

4. நான்கு ஸமுத்திரங்களே தர்மாதி நான்கு புருஷார்த்தங்கள்.

5. தேகமே நவரத்தினத் தீவு.

6. மாம்ஸம், ரோமம், துவக்கு (சருமம்), இரத்தம், சுக்கிலம், மஜ்ஜை, அஸ்தி, மேதை, ஓஜஸ்ஸு என்னும் ஒன்பது தாதுக்களும் புஷ்பராகம், நீலம், வைடூரியம், பவழம், முத்து, மரகதம், வஜ்ஜிரம், கோமேதகம், பத்மராகம் என்னும் நவரத்தினக் கண்டங்களாகும்,

7. மனத்தின் ஸங்கற்பங்களே ஸந்தானம், ஹரிசந்தனம், மந்தாரம், பாரிஜாதம், கதம்பம் என்னும் கல்பக விருக்ஷங்களாகும்.

8. தேஜஸ்ஸாகும் மனமே கல்பக உத்தியான வனம்.

9. நாவினால் ருசித்துணரத்தக்க இனிப்பு, புளிப்பு, கசப்பு, உவர்ப்பு, கார்ப்பு, துவர்ப்பு, என்னும் ரஸங்களே வஸந்த, கிரீஷ்மாதி அறுவித ருதுக்களாகும்.

10. ஞானமே (விசேஷ) அர்க்கியம். இதுவென்று பஞ்சேந்திரியங்களால் சுட்டி அறியக்கூடியயாவும் நைவேத்தியத்திற்குரிய (அவிஸ்) பதார்த்தங்களாகும். அறிபவனே, அதாவது, தானே, ஹோமஞ் செய்பவன் ஆகும். ஞாதரு

ஞானம், ஞேயம் என்னும் திரிபுடிகளின் அபேதபாவனையே ஸ்ரீ சக்கிர பூஜையாகும்.

11. நியதியோடு கூடிய சிருங்காரம், பயானகம், ரௌத்திரம், பீபத்ஸம், ஹாஸ்யம், வீரம், கருணை, அத்புதம், சாந்தியென்னும் ஒன்பது ரஸங் (சுவை)களும் அணிமாதி பத்து ஸித்தி தேவதைகளாகும்.

12. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம், புண்ணியம், பாபம், இவை எட்டும் பிராஹ்மி முதலிய எட்டு மாத்ருகா சக்திகளாம்.

13. மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆஞ்ஞை யென்னும் ஆறுதாரங்களும், மூலாதாரத்திற்குக் கீழுள்ள குளஸஹஸ்ராரமும், மேலுள்ள அகுள ஸஹஸ்ராரமும், உள்நாக்கும் சேர்ந்து ஒன்பது ஆதாரங்கள். இவற்றின் ஸமஷ்டி ஒன்று, ஆக பத்தும் ஸர்வ ஸங்க்ஷோபிண்யாதி பத்துமுத்ரா தேவதைகளாகும்.

14. பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சுரோத்திரம், துவக்கு, சட்சு, ஜிஹ்வை, கிராணம், வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என்னும் பதினைந்தும் இங்ஙனம் விகாரப்பட்ட மனமும், சேர்ந்து பதினாறும், பதினாறிதழ்க் கமலத்திலுள்ள காமாகர்ஷிணீ முதலிய பதினாறு சக்திகளாம்.

15. பேசுதல், ஏற்றுக்கொள்ளுதல், நடத்தல், கழித்தல், ஆநந்தித்தல் என்னும் ஐந்து கர்மேந்திரியங்களின் தொழில்களும், தியாகபுத்தி, கிரகிக்கும் புத்தி, உபேக்ஷா புத்தி, ஆக எட்டும் அஷ்டகமலத்திலுள்ள அநங்க குஸுமாதி எட்டு சக்திகளாம்.

16. அலம்புஸா, குஹா, விச்வோதரி, வாரணா, ஹஸ்தி ஜிஹ்வை, யசோவதீ, யஸ்வினீ, காந்தாரீ, பூஷா, சங்கினீ, ஸரஸ்வதீ, இடை, பிங்கலை, சுஷும்னை என்னும் பதினான்கு நாடிகளின் சக்திகளே ஸர்வ ஸங்க்ஷோபிணி முதலிய பதினான்கு கோண தேவதைகளாவர்.

17. பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்ஜயன் என்னும் பத்து வாயுக்களே பஹிர்த்தசாரத்திலுள்ள ஸர்வ ஸித்திப்பிரதை முதலிய பத்து தேவதைகளாவர்.

18. மேற்கூறிய தசவாயுக்களோடு சேர்க்கையாகும் உபாதிபேதத்தினால் ஜாடராக்னியானது ரேசகம், பாசகம், சோஷகம், தாஹகம், ப்லாவகம் என்னும் தொழில்களையும்,

19. க்ஷாரகம், உத்காரகம், க்ஷோபகம், ஜ்ரும்பகம், மோஹகம் என்னும் தொழில்களையும் செய்து, பிராணிகள் புஜித்த பக்ஷியம், போஜ்யம், சோஷ்யம், லேஹ்யம், பேயம் என்னும் ஐந்து வித ஆகாரத்தை ஜீரணம் செய்கின்றது.

ஜாடராக்கினியானது பிராணாதி, ஐந்து வாயுக்களோடும் நாகாதி ஐந்து உபவாயுக்களோடும் சேர்ந்து தனது பத்து கலைகளினால் மேற்கூறிய பத்து தொழிற் பெயர்களை யடைகின்றதென அறிக.

20. ரேசகம் முதல் மோஹகம் ஈருகவுள்ள பத்து அக்னிகலைகளே அந்தர்த்தசார சக்கிரத்திலுள்ள ஸர்வக்ஞாதி பத்து சக்திகளாவர்.

21. சீதம், உஷ்ணம், சுகம், துக்கம், இச்சை, ஸத்வம், ரஜசு, தமசு என்பனவே எட்டு அஷ்டகோண சக்கிரத்தின் சக்திகளாகிற வசினீ முதலியவராவர்.

22. சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் என்னும் பஞ்சதன்மாத்திரைகளே ஐந்து புஷ்ப பாணங்கள்.

23. மனமே கரும்புவில்.

24. ராகமே (ஆசை) பாசம்.

25. த்வேஷம் அங்குசமாகும்.

பாசாங்குச தனுர்ப்பாணங்கள் பரதேவதையின் ஆயுதங்களாகும்.

26. அவ்யக்தம், மஹத்தத்வம், அஹங்காரம் என்பவையே காமேச்வரீ, வஜ்ரேச்வரீ, பகமாலினீ என்னும் மத்திய த்ரிகோண சக்திகளாவர்.

27. நிருபாதிக ஞானமே காமேச்வரர்.

28. ஸதா ஆநந்தகனமாயுள்ள ஆத்ம ஸ்வரூபமே பரதேவதையாகும் லலிதை.

29. பரதேவதையின் செம்மை நிறமானது எல்லாவற்றின் விமர்சம் என்னும் விசாரணையேயாம்.

30. அநன்ய (பேதமற்ற) சித்தத்தினாலேயே ஸர்வஸித்திகள் (ஏற்படும்).

31. அடிக்கடி அநுஸந்தானஞ் செய்வதே உபசாரங்களாகும்.

32. நான், நீ, உண்டு, இல்லை, செய்யத்தக்கது, செய்யத்தகாதது, உபாஸிக்கத்தக்கது என்னும் விகற்பங்

களை யெல்லாம் ஆத்மாவில் லயம் செய்தலே ஹோமமாகும்.

33. இப் பாவனோபநிஷத்தில் ஒன்றுமுதல் முப்பத்திரண்டு வாக்கியங்களில் கூறப்பட்ட குருபாவனை முதல் ஹோமாந்தமான பாவனைகளின் பரஸ்பர பேதங்களை யொழித்து அபேதபாவனை செய்தலே தர்ப்பணமெனப்படும்.

34. காலமானது பதினைந்து திதிகள் வடிவமாய்ப் பரிணமித்திருக்கின்றதென உணர்தல் (அவசியம்).

35. இங்ஙனம் மூன்று முகூர்த்தங்கள் அல்லது இரண்டு முகூர்த்தங்கள் அல்லது ஒரு முகூர்த்தம் பாவிக்கும் ஸாதகன் ஜீவன்முக்தன் ஆகின்றான். அவனே சிவயோகியென்று கூறப்படுவன்.

36. காதி மதரீதியாய் அந்தஸ்சக்கிர பாவனைகள் பிரதிபாதிக்கப்பட்டன.

37. எவன் இங்ஙனம் அறிகின்றனோ அவன் "அதர்வ சிரஸ்ஸை" அத்யயனம் செய்தவன் ஆகின்றான் —என்பது பாவனோப நிஷத்தின் சுருக்கமாகும்.

இங்ஙனம், முமுக்ஷுவாகும் ஸாதகன் ஸ்ரீ சக்கிரத்திற்கும், தனது சரீரத்திற்கும் யாதொரு பேதமும் இல்லை யென நன்கு அறிவதோடு பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் என்னும் பிரஹ்மாண்டமும் ஸ்ரீ சக்கிரத்தைவிட வேறன்று எனத் தெளிதல் வேண்டும்.

ஸ்ரீ சக்கிரமானது சிவசக்திகளின் ஐக்கிய ரூபமாகும். சிவ சக்கிரங்கள் நான்கு; அவை பிந்து, அஷ்டதள கமலம், பதினாறுதள கமலம், பூபுரம் என்பன. சக்தி சக்கிரங்கள் ஐந்து; அவை மத்திய முக்கோணம், அஷ்ட

கோணம், உள்தசாரம், வெளித்தசாரம், பதினன்கு கோணம், என்பனவாம். இவற்றுள் முக்கோணத்தைப் பிந்துவோடும், அஷ்டகோணத்தை அஷ்டதள கமலத்தோடும், உள், வெளி என்னும் இரண்டு தச கோணங்களைப் பதினறுதள கமலத்தோடும், பதினன்கு கோணத்தைப் பூபுரத்தோடும், ஐக்கியப்படுத்தி சிவ சக்திகளின் ஐக்கியத்தை புணர்தல் வேண்டுமென்பது சம்பிரதாயமாகும். சக்தியைச் சிவத்தோடு ஐக்கியம் செய்வதுதான் ஜீவப்பிரஹ்மைக்கிய மெனப்படும். சித்சக்தி அல்லது பிரஹ்ம வித்தியோபாஸன மார்க்கமாய், ஹயக்ரீவர், வியாசர், துர்வாஸர், அகஸ்தியர், தத்தாத்ரேயர், வஸிஷ்டர் முதலிய சகல ரிஷிகளும், கோரக்ஷநாதர், மத்ஸ்யேந்திரநாதர் முதலிய சகல சித்தர்களும், காளிதாஸர், ஸ்ரீ சங்கர பகவத் பாதர் முதலிய பெரியார்களும் நித்தியாநந்தப் பெருவாழ்வை யடைந்துள்ளார்கள். ஆதலின் அத்தகைய சாக்தாத்வைதம் ஈண்டு சுருக்கமாய் விவரிக்கப்படுகின்றது.

நிர்விசேஷ நிருபாதிக பிரஹ்மமே காமேஶ்வரர். இவர் கேவலம் பிரகாச வடிவினர். இந்த நிர்விசேஷப் பிரஹ்மத்தில், சூரியனிடத்தில் கிரணங்களைப் போல், அபின்னமான (பிரிக்க முடியாத) ஒரு சக்தியுண்டு. இது சித்சக்தி என்று கூறப்படும்.

"सत्यं ज्ञानमनन्तं ब्रह्म," "आनन्दो ब्रह्म"

என்று உபநிஷத்துக்கள் கூறுவது இந்த சித்சக்தியையேயாகும். இது விமர்ச வடிவம். இதுதான் அஹம்பத லக்ஷ்யார்த்த வடிவ கூடஸ்த ஸ்வரூப சாக்ஷியாகும். ஸ்தூல ஸூக்ஷ்ம காரண சரீரங்களில் ஜாக்கிர, ஸ்வப்ன, ஸுஷுப்தி அவஸ்தைகளையும் அவற்றின் விவகாரங்களை

யும்-பிரகாசிப்பிக்கச் செய்வதனால் திரிபுரசுந்தரீ யென்றும், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், மின்னல், அக்னி, மனம் என்னும் பிரகாசப் பொருள்களையும் பிரகாசிக்கச் செய்வதால் இராஜ ராஜேஸ்வரி யென்றும், யாவராலும் “நான் நான்” என்று அநுபவிக்கப் படுதலால் பரா ஹந்தை யென்றும், எல்லா விகல்ப (பேத) ஞானங்களைப் பிரகாசிக்கச் செய்வதால் சிதி அல்லது ஸம்வித் என்றும், ஜடசக்தியாகும் அவித்தையினால் தோன்றும் ஸகல அத்தியாஸங்களையும் நிவர்த்திப்பதனால் வித்யை யென்றும், இந்த சிற்சக்தியே விவகரிக்கப்படுகின்றது.

இத்தகைய பிரஹ்மாபின்ன சிற்சக்தியினின்றும், ஸர்வ ஜீவர்களின் கர்மாக்களின் நிமித்தமாய், அவரவர்களுக்கு, அவரவர்களின் புண்ணிய பாப அநுபவ ரூபமான சுக துக்கங்களை யடைவிக்கப் போக்கிய வடிவப் பிரபஞ்சம் சிருஷ்டி செய்தற் பொருட்டு ஜட சக்தியென்னும் ஒரு கல்பித சக்தி யுண்டாயிற்று. ஒரு விஸ்தாரமான மணல் வெளியில் சூரிய கிரணங்களின் சம்பந்தத்தால் இல்லாததான பேய்த்தேர் என்னும் கானல் ஜலம் தோற்றியது போல, அஜ்ஜடசக்தியினின்றும் காலத்திரயத்திலும், இல்லாததான கல்பித மாயை யுண்டாயிற்று. அம்மாயையினின்றும், கானல் ஜலப் பிரவாஹம்போல் அவ்வியக்தமும், மஹத் தத்துவ அஹங்காரங்களும் தோன்றின. அவ்வகங்காரத்தினின்றும் ஆகாசாதி பஞ்சபூதங்களும் தோன்றின. இதுவே ஸர்வப் பிரபஞ்ச சிருஷ்டிக் கிரமமாகும்.

சித்சக்தியபின்ன பிரஹ்ம சேதனம் ஜடமாயுள்ள மாயையில் அநுப்பிரவேசஞ் செய்து காரணேச்வரன் எனப்படுவன்.

இங்ஙனமே அவ்யக்த, மகத்தத்துவ, அகங்காரங் களில் சேதனம் அநுப்பிரவேசம் செய்து ஸூத்ராத்மா (அந்தர்யாமி), ஹிரண்யகர்ப்பன், விராட் என்னும் பெயர் களேயும் பெறுகின்றது. இங்ஙனமே ஜடசக்தியாத்மக மாயா பரிணமங்களான சர்வ பிரபஞ்சத்திலும், சிதாநந்த வடிவ சிற்சக்தியோடு ஸன்மாத்திர நிர்விசேஷ சேதனம் அதிஷ்டானமாய் விளங்குகின்றது. இதுதான் சிருஷ்டி கிரமத்தின் சுருக்கமாகும். சித்சக்தியபின்ன பிரஹ்மத்தி னிடத்தில், கயிற்றில் பாம்புபோல், இப்பிரபஞ்சம் தோற்றுதலால் இதைச் சித்விவர்த்தம் என்றும், ஜடாத் மக மாயையின் விரிவு ஆதலின் மாயா பரிணமமென்றும் சாஸ்திரங்கள் கூறும். நாம ரூபாத்மக பிரபஞ்சமானது, அஸ்தி பாதி பிரிய வடிய அகண்டாகார விருத்தி ஞானத் தினுல், பிரஹ்ம ஸ்வரூப *அபிவியஞ்சக மாதலின் இது முமுக்ஷுவிற்கு ஹேயமல்ல ; ஈஸ்வர சிருஷ்டமாதலின் அது பிரளய பர்யந்தம் நாசமும் அடையாது. ஈஸ்வர சிருஷ்டியில் அடங்கிய எந்தவொரு பொருளும் ஜீவன்து துக்கத்திற்குக் காரணமேயல்ல; மற்றோ ஜீவ சிருஷ்டி யாகிய பேதமே அதாவது ஈஸ்வர சிருஷ்டியில் அடங்கிய வஸ்துக்களில் ஒன்றற்கொன்றுள்ள பரஸ்பரபேதமே துக் கத்திற்குக் காரணமாகும். பேத தர்சனமே அஞ்ஞானம் ; பேத தர்சனம்தான் துவைதம். துக்க காரணமாகும் இந்த ஜீவ சிருஷ்ட பேதம்தான் மித்யையென்று அறிதல் வேண்டும். பேதம் சத்தியமென்று ஜீவர்கள் நினைப்பதால் பின்ன வஸ்துக்களிடத்தில் ஆசையும், ஆசையால் பிர விருத்தியும், அவாவின பொருள் கிட்டாதபோது துக்க மும், இச்சித்த அப்பொருள் கிடைக்காமற் செய்தவர்

---

* தோற்றுவாய்

களின்மேல் த்வேஷமும், இவ்வனமே லோபமோஹாதி ஸகல துர்க்குணங்களும் உண்டாய்ப் பேதப் பிரவிர்த்தியில் சுழன்றுகொண்டு ஜனன மரண ஸம்ஸாரத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர். இதுதான் பந்தமாகும். இந்த பந்தம் ஜீவர்களால் கற்பிக்கப்பட்டதேயாகும். ஜீவத்தன்மையுள்ள வரையில் பந்தமுண்டு. ஜீவத்தன்மையானது, தானல்லாத ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்களைத் தான் என்று அபிமானிக்கும அஹங்காரமும், தனக்கு எந்த வகையிலும் சம்பந்தப்படாத ஆந்தர பாஹ்யப் பொருள்களில் தனது என்னும் மமதையுமே ஆகும். அவித்தையால் தோற்றும் பந்தம் ஒழிதற்கு ஞானமாகும் வித்தையே சிறந்த காரணமாகும். இங்கே வித்தையென்பது பிரஹ்ம வித்தை அல்லது ஸ்ரீ வித்தையாகும்.

இந்த ஸ்ரீவித்யாஸ்வரூபிணியான பராஸம்வித்தானது யாருடைய சித்தத்தில் ஸ்புடமாய் விளங்குமோ அவனே, பேதத்தைக் காரணமாய்க் கொண்டு தோற்றின சகல அநர்த்தங்களாகும் பண்டாஸுரன் முதலிய சத்ருக்களையொழித்து, ஸ்வாராஜ்யத்தை யடைதற்குரிய யுவ ராஜாவாவன். அவன் தனது ஞானத்தின் மகிமையால் கற்பிதமாய்த் தோன்றும் சகல அநாத்ம பேதங்களை யொழித்து சிவசக்தியைக்கியப் பேரானந்த ஸாகரமாய் விளங்குவான். இதுதான் சாக்தாத்வைதத்தின் சுருக்கமாகும்.

இதுகாறும் ஸ்ரீநகரத்தின் †இருபத்தைந்து கோட்டைகளின் விவரமும், அவற்றிற்குள் விளங்கும் சிந்தாமணி

---

† 25 கோட்டைகள், 9 சக்கிரங்கள் இவைகளின் அத்யாத்ம விமர்சம் இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட "பராபூஜா வாஸனு விமர்சம்" என்னும் நூலில் விஸ்தாரமாய் அறியலாம் :

கிருஹத்தின் வர்ணனையும், அதற்குள் இலங்கும் பஞ்சப் பிரஹ்ம மஹா மஞ்சத்தின் பெருமையும், அதன்மே லுள்ள ஸ்ரீ சக்கிரத்தின் விளக்கமும், ஆவரண தேவதை களின் சிறப்பும் ஒருவாறு சுருக்கமாய்க் கூறப்பட்டன. மற்றும் ஸ்ரீ சக்கிரத்தினுடையவும் ஆவரண தேவதைகளி னுடையவும் அத்யாத்ம தத்துவமும் ஒருவாறு கூறப்பட் டன: அன்றியும் ஸ்ரீ வித்யோபாஸ்தியின் மஹா பலஞன சாக்ஷாத்வைத விமர்சமும் மிகு சங்கிரகமாகவும் செய்யப் பட்டது. விஸ்தாரமாய் அறிய விரும்புவோர் ஞானர் ணவம், தந்திரராஜம், தந்த்ரஸாரம், மாத்ருகா சக்கிர விவேகம், ஸௌபாக்ய ரத்னுகரம், யோகினீ ஹ்ருதயம் (வாமகேச்வர தந்த்ரம்), *காம கலா விலாசம், வரிவஸ்யா ரஹஸ்யம், திவ்விய மங்கள த்யானம் முதலிய நூல்களைக் குரு முகமாய்ச் சிரவணஞ் செய்து அறியவும்.

பாவஞேபநிஷத்தின் சுருக்கத்தில் கூறப்பட்டபடி ஸ்ரீநகரமும் அதன் கோட்டைகளும், சரீரமும் சரீரத்தி லுள்ள பற்பல தாதுக்களுமேயாமென்று நன்கு புலப்படு கின்றன. ஸ்ரீ சக்கிரமும் அங்ஙனமே யிருக்கின்றதென்று புலப்படுகின்றது.

> अष्टाचक्रा नवद्वारा देवानां पूरयोध्या ।
> यो वैतां ब्रह्मणो वेद अमृतेना वृतां पुरीम् ।
> तस्मै ब्रह्म च ब्रह्मा च आयुः कीर्तिं प्रजां ददुः ॥

என்னும் ச்ருதிப் பிரமாணப்படி மேற்கூறிய விஷயம் சித் தாந்தமாகின்றது.

---

*இவ்விரண்டு நூல்களும் விருத்தியுரையுடன் இந்நூ லாசிரியரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்பட் டுள்ளன.

பிண்ட, அண்ட, க (ஆகாச) கோளங்களும் ஸ்ரீ சக்கிரமே யாகும். ககோளம், பூகோளம், சரீரம் முதலிய யாவற்றிற்கும் மனமே காரணமாய் இருப்பதால் மனமே ஸ்ரீ சக்கிரமாகு மென்பது பரம சித்தாந்தமாம். மனமே ஸ்ரீ சக்கிரமென்றும், மனத்தின் விருத்திகளே ஆவரண தேவதைகளென்றும், அம்மனத்தின் அதிஷ்டானமாய் விளங்கும் கூடஸ்தஸாக்ஷியே பரதேவதை என்றும் அறிக.

பிண்டம்:—சர்மம் (தோல்), இரத்தம், மூளை, மஜ்ஜை, எலும்பு என்னும் ஐந்து தாதுக்களும் சக்தி மூலகங்கள். சுக்கிலம், தேஜஸ், பிராணன், ஜீவன் என்னும் நான்கும் சிவ மூலகங்கள். இவ்வொன்பது தாதுக்களும்சேர்ந்து சரீரமாகின்றது.

அண்டம்: பஞ்ச பூதங்கள், சக்தி மூலகங்கள்; மாயை, சுத்தவித்யை. ஈஶ்வர, ஸதாசிவ தத்துவங்கள் சிவ மூலகங்கள்; ஆக ஒன்பது தத்துவங்களோடு கூடி விளங்குவது பிரஹ்மாண்ட மாதலின் அதுவும் ஸ்ரீ சக்கிர வடிவமே.

க (ஆகாய) கோள பூகோளங்கள்:—

ஸ்ரீ சக்கிரத்தில் உள்ள ஒன்பது ரேகைகளே ஆகாயத்திலுள்ள சூரியன் முதலிய நவக்கிரஹங்கள். நவ கண்டங்களோடு விளங்கும் பூகோளமும் ஸ்ரீ சக்கிரமே.

இங்ஙனம் தன்னையும் (சரீரத்தையும்), குருவையும், ஆத்மஸ்வரூப பராசக்தியையும், மந்திரத்தையும், ஸ்ரீ சக்கிரத்தையும், பூமண்டலத்தையும், வானத்தையும், பிரஹ்மாண்டத்தையும், ஏக ரூபமாய்ப் பாவிக்க வேண்டுமென்பது ஸ்ரீ வித்யோபாஸனையின் சிதையாத சித்தாந்த

மாகும். இந்த பரம சித்தாந்தம் யாரோவொரு மஹா புருஷனுக்கு ஸித்திக்குமேயாயின் அவன் கிருத கிருத்தியன் ஆவான். அவனே தன்யன். அவனே முக்தன். அத்தகைய நிலையை, இந்நூலைப் படிப்பவர்க்கு அருள் புரியுமாறு, குருமூர்த்தி வடிவமாய் உள்ள பரதேவதையை வணங்குவோமாக. சிவம்.

ஸ்ரீ பரதேவதார்ப்பண மஸ்து.



SRI NAGARA VIMARSAM
(Tamil)

Rs. 45/-

எமது வெளியீடுகள்
பெரிய எழுத்தில் பாராயணத்திற்குரியது தமிழில்

ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ர நாம ஸ்தோத்ரம் (பாராயணம்)	ரூ. 8
ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ர நாம ஸ்தோத்ரம் (பாராயணம்) (மிக பெரிய எழுத்து)	ரூ. 16
ஸ்ரீ லலிதா சஹஸ்ர நாம ஸ்தோத்ரம், த்ரிசதி (பாராயணம்)	ரூ. 12
ஸ்ரீ லலிதா சுஹஸ்ர நாமாவளி, த்ரிசதி, ஆச்சரயாஷ்டோத்ரஸத, ஸுப்ரமண்ய நாமாவளி	ரூ. 16
ஸ்ரீ வித்யா நவரத்ன மாலா (ஸ்ரீ வித்யா உபாஸகர்களுக்கு இன்றியமையாதது)	ரூ. 60
ஸ்ரீ தேவீ மஹாத்மியம் என்னும் ஸ்ரீ துர்கா ஸப்தசதீ	ரூ. 80
ஸ்ரீ வித்யா லகு பூஜை ஸ்ரீ தேவி ஸுக்தங்களும் உபநிஷத்களும்	ரூ. 42
ஸ்ரீ மஹா கணபத் சதுராவ்ருத்தி தர்ப்பணம்	ரூ. 12
ஸ்ரீ மஹா கணபதி சங்கட ஹரசதுர்த்தி பாராயணம் (12 மாதங்களுக்கும், அதிக மாசம், பூஜையுடன்)	ரூ. 70
ஸ்ரீ லக்ஷ்மி சஹஸ்ரநாம ஸ்தோத்ரம், த்ரிசதி, அஷ்டோத்ரஸத	ரூ. 16
ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமாவளி	ரூ. 13
ஸ்ரீ லக்ஷ்மி சஹஸ்ரநாமாவளி	ரூ. 13
ககாரகணபதி சஹஸ்ரநாமாவளி	ரூ. 13
ஸ்துதிரதனமாலா	ரூ. 16
ஸ்ரீ ஸ்கந்த சஷ்டி கவசம் 6 படை வீடு	ரூ. 16
நித்ய தேவதா த்யான ஸ்லோகங்கள்	ரூ. 16
வாஞ்சா கல்பலதா	ரூ. 25
அபிராமி அந்தாதி	ரூ. 10
திருக்குறள் (மூலம்)	ரூ. 18
வாழ்வு நலம் பெற	ரூ. 30
திருமணப் பொருத்தம் I, II	ரூ. 40 & ரூ. 40
உச்சிஷ்டகணபதி சஹஸ்ரநாமாவளி	ரூ. 13
ஸ்ரீ வித்யா குருமண்டல ஸபர்யா	ரூ. 120
ஸ்ரீ வித்யா ஸந்தியாவந்தனம்	ரூ. 22
ஸ்ரீ ஸுப்ரமண்ய தத்துவம் - ஸ்ரீ சிதாநந்தநாதர்	ரூ. 66
ஸ்ரீ வித்யா கீதை - ஸ்ரீ சிதாநந்தநாதர்	ரூ. 44
ஸ்ரீ வித்யா குரு தத்வ விமர்சம் - ஸ்ரீ சிதாநந்தநாதர்	ரூ. 24
மனீஷாபஞ்சகம் - ஸ்ரீ சிதாநந்தநாதர்6	ரூ. 95
பாவனோபநிஷத்வாதுல ராமசந்த்ரசர்மா	ரூ. 40
ஸ்ரீ வித்யாஸபர்யாபத்ததி	ரூ. 200
Sri Ganapathy Chathuravrithi Tharpanam (Sanskrit)	Rs. 12.00
Sri Vidhya Lagupooja (Sanskrit)	Rs. 25.00
Sri Vidhya Dhina Parayanam (Sanskrit)	Rs. 60.00
Sri Vidhya Nithyanu Sandhanam (Sanskrit)	Rs. 40.00
Sri Vidhya Saparya Padadhathi (Sanskrit)	Rs. 140.00
Sri Devi Mahathmiyam Parayanam (Sanskrit)	Rs. 70.00
Samavedha Sandhya Vandhanam (Sanskrit)	
Shakespeare and Astrology	
Sri Vidhya Sandhiyavandhanam (Sanskrit)	

Shree Gnanaprakashan, "Nutech Supraja-A", Plot No. 377, 6th S
Chennai - 600 078. Phone : 044 - 2474 0001, Cell

Sri Nagara Vimarsam - SB - Tamil
7
GIRI
9193460
MRP: 45